# அமிர்தவசனி

தெய்விக மாதப் பத்திரிகை


மலர் : 14 | சுபகிருது ஹு கார்த்திகை மீ | வருட சந்தா
இதழ் : 8 | நவம்பர்-டிசம்பர் 1962 | ரூ. 3-00




குண்டோதரனுக்கு அன்னமிட்டது


மகாமகோபாத்யாய,
டாக்டர் உ. வே. சாமிநாதையர்
நூல் நிலையம்
பெயர் அமிர்தவசனி
தொடர் எண் 3328
தொகுப்பெண் XX A 82

## உள்பொருள்


| | | பக்கம் |
|---|---|---|
| 1. | சொல்லும் ஜோதியும் (திருப்புகழ்மணி) ... | 337 |
| 2. | குண்டோதரனுக்கு அன்னம் இட்டது (கி. வா. ஜகந்நாதன்) ... | 341 |
| 3. | குமாரஸ்தவ விளக்கம் (திருப்புகழ் சதுரர் சே. த. ராமலிங்கம் பிள்ளை, B.A., B.T.) ... | 344 |
| 4. | "மனமெனும் பொருள்" சிவபுரம் திருப்புகழ் விரிவுரை (குகஸ்ரீ) ... | 348 |
| 5. | மயில் ஏறிய வானவன் (கி. வா. ஜ.) ... | 359 |
| 6. | நல்லியக்கோடர் (வ. சு. செங்கல்வராய பிள்ளை, M.A.) ... | 362 |
| 7. | சந்நியாசி (ஆனந்தன்) ... | 365 |
| 8. | ஸ்ரீமுருக ஆனந்த அமுதம் (ஆ. கி. ரங்கராஜன்) | 367 |
| 9. | பரம ரகஸ்யம் (ரஸபதி) ... | 370 |
| 10. | SKANDA SASHTI 1962 (*Thiruppugal Mani*) ... | 382 |


---

### அமிர்தவசனி சந்தாதாரர்கட்கு வேண்டுகோள்

சித்திரைமீ முதல் பங்குனிமீ முடிய வருடச் சந்தா உள் நாட்டிற்கு ரு. 3. பணம் முன்னதாக அனுப்பவும். வி. பி. இல்லை.

இலங்கைக்கு நான்கு வருடச் சந்தா வி. பி. தபால் செலவு உள்பட ரு. 14.

மலேயா, ஆப்பிரிக்கா, மற்ற நாடுகளுக்கு நான்கு வருட சந்தா முப்பது ஷில்லிங்குகள், போஸ்டல் ஆர்டராக அனுப்பவும்.

சித்திரை மாதத்திற்கு முன்னதாகவே சந்தாத் தொகையை அனுப்பினுல் தொடர்ந்து பத்திரிகை கிடைக்கும். வருட நடுவில் சந்தாச் செலுத்தினுல், சித்திரைமீ முதல் வந்த முன் இதழ்கள் கிடைக்கக் கூடியதை உத்தேசித்து, சந்தாத் தொகையைப் பெற்றுக் கொள்ளவோ, மறுக்கவோ நேரும்.

அமிர்தவசனி 54, பந்தர் தெரு, சென்னை.

---

குறிப்பு : முந்திய இதழ்களின் வருடத் தொகுப்புகள் 3-50 வீதம் கிடைக்கும். சில பிரதிகளே கைவசம் உள. தபால் செலவு ரு. 1.

# அமிர்தவசனி

தெய்வீக மாதப்பத்திரிகை


எல்லோரும் இன்புற் றிருக்க நினைப்பதுவே
அல்லாமல் வேறொன் றறியேன் பராபரமே.


ஆசிரியர்: சு. முத்துஸ்வாமி

| மலர் 14 | சுபகிருது ஹூ கார்த்திகை மீ<br>நவம்பர்—டிசம்பர் 1962 | இதழ் 8 |
|---|---|---|


## சொல்லும் ஜோதியும்

[திருப்புகழ்மணி]

தெய்வம் சப்தமாய் எங்கும் நிறைந்திருக்கிறது. "சப்தப்ரம்மமயி" என்று ஜெகன் மாதாவை வாழ்த்தார் ஆதிசங்கராச்சாரியார். சொல்லும் அதனுடைய பொருளும் கூடுமிடமே சப்தம். ஆண்டவன் நாமமாகிய சப்தத்துடன் தெய்வம் என்ற மனக் கருத்தும் சேரும்பொழுது அது பூஜனையாய் விடுகிறது.

'ஓசை ஒலி யெல்லாம் ஆனாய் நீயே' என்றார் அப்பர். அப்பர் பாடிய தேவாரத்தில் உபநிஷத்தின் கருத்து அடங்கி யிருக்கிறது. அப்பர் உபநிஷத்தா படித்தார். இல்லை; ஆனால் "நமசிவாய" என்ற நாமத்தை மனதில் நினைத்தார். வேதம், உபநிஷத் எல்லாம் அந்நாமத்தினுள் அடக்கம். ஆதலால், அந் நாமத்தை நினைத்த உடன் அவருக்கு உபநிஷத்தின் கருத்துக்கள் உள்ளத்தில் நிரம்பி விட்டன.

---

மனமயக்கம் இன்றி, மதிதெளிந்த ஞான
இனத்தாரைத், தெய்வம் எதிர்நோக்கி நிற்கிறதே.

"இல்லக விளக்கது, இருள் கெடுப்பது
சொல்லக விளக்கது, ஜோதி யுள்ளது
பல்லக விளக்கது, பலரும் காண்பது
நல்லக விளக்கது, நமசிவாயவே"

என்று "நமசிவாய" நாமத்தையே வைத்துப் பாடி விட்டார்.

இதயமாகிய இல்லத்தின் இருளைக் கெடுத்து ஒளியைத் தருவது இறைவனுடைய நாமங்களே. அருணகிரியார் முருகனை நோக்கி, முருகா! "என் உள்ளம் இருட்டா யிருக்கிறது. அவ்விருட்டைப் போக்க ஓர் வாக்குத் தா" என்றார். "சரவணபவ" என்ற வாக்கைத் தந்து விட்டான் முருகன். உபநிஷத்தின் கருத்துக்களையே திருப்புகழாகக் கொட்டி விட்டார். உலகத்தில் ஒற்றுமை யில்லாம லிருக்கும் பொழுது ஆழ்வார்கள், நாயன்மார், சித்தர் முதலியவர்கள் ஒற்றுமையை உண்டாக்கி விட்டனர். "அதையே சொல்லக விளக்கது" என்றார் அப்பர். பொருள் நிறைந்த சொல் ஆண்டவனுடைய நாமம். அந்த நாமத்தில் ஒரு கருணை ஜோதி இருக்கிறது. அது அறிவை விளக்கி விடுகிறது. உடம்பின் வியாதியைப் போக்கி விடுகிறது. ஜோதி யுணர்கின்ற வாழ்வு சிவமென்றார் அருணகிரியார்.

செவிச் செல்வமே சிறந்தது என்றார் வள்ளுவர். குருவினுடைய வாக்கும் சிஷ்யனுடைய செவியும் முக்கியமானது. இவ்விரண்டையும் சேர்க்கும் கருவி

---

சித்தம் தெளிவடையச் சிற்சபையும், தாண்டவமும்
அத்தன் அறிவிக்கும் அற்புதத்தை ஓரேமோ?

மனமே. குருவின் உபதேசம் சப்தத்தின் மூலமாகவே சிஷ்யனுடைய செவியில் போய்ச் சேருகிறது. எல்லாக் கலைகளிலும் பண்டிதரான அருணகிரியார், "இந்த சரீரமாகிய ஜீவாத்தும ஞான ஊரில், ஆட்சி செய்ய ஓர் வாக்கு அருள்வாயே" என்றார். ஆட்சி என்பதென்ன? அதிகாரம் என்பதென்ன? மனத்தின் பக்குவ நிலையே அதிகாரம். உலகமெல்லாம் வசப்படுத்துவதற்கும், பகவானைத் தெரிந்து கொள்வதற்கும் ஓர் நிலையுண்டு. அந்த நிலை தான் முருகா, ராமா, கிருஷ்ணா, சிவா என்ற நாமசத்தம். அந்த சத்தம் அல்லது ஒலியிலுள்ள ஜோதிதான் ஜீவாத்தும ஞான ஊரில் ஆட்சியைத் தருகிறது. இதையே "சொல்லக விளக்கது" என்றார் அப்பர். சொல்லுக்குள்ளே ஒரு விளக்கு எரிந்து கொண்டிருக்கிறது. அந்த விளக்கு, விளக்கில்லாத உள்ளங்களிலெல்லாம் விளக்கேற்றி விடுகிறது. ஏற்றிய உள்ளம் ஜோதியுள்ள சொற்களைச் சொற்பொழிவாகவும், பாட்டாகவும் கொட்டுகிறது. இறைவனுடைய நாமங்களே, பயனுடைய சொற்கள். வீண் பேச்சுக்கள் இருளைத் தருகிறது. துன்பத்தை யுண்டாக்குகிறது. ஆதலால் வீண் பேச்சுக்களை நிறுத்தி நாமங்களைச் சொல்ல வேண்டும்.

ஒரு தத்துவம் நம்முள்ளே இருக்கிறது. அந்த தத்துவமே பகவான். அவனே வாழும் தீயை உள்ளேயிருந்து ஊதுகிறான். நாம் வெளியே விட்டு உள்

---

இயற்கை விளையாட்டாம் இவ்வுலகில், ஏய்க்கும்
மயற்கை தவிர்ந்தாரை மாதேவர் காப்பாரே.

விழுக்கும் மூச்சுக் காற்றே வாழும் தீயை எரியச் செய்கிறது. அம்மூச்சுக் காற்றை அவ்வாறு இழுத்து விடுபவன் ஆண்டவனே. நம்போலிருக்கும் ஜீவனுக்கு பிரதிநிதி வாயு. வாயு புத்திரனைத்தான் இராமாயணத்தில் ஆஞ்சனேய னென்கிறோம். வாயுரூபமாயிருக்கப்பட்ட ஜீவனுக்கு மோட்ச மடைவதற்கு வழியென்ன? உலகத்தில் ரூபம் ஒன்று, அரூபம் ஒன்று. ரூபமா யிருக்கப்பட்டது பஞ்சபூத சரீரம், அரூபமாயிருக்கப்பட்டது சத்தம், அல்லது ஒலி வடிவம். சத்த ரூபங்களைச் சத்தத்தினுல் தான் உணரலாம். கண்ணுல் பார்க்க முடியாது. முருகா, ராமா வென்ற சத்தம் பதினுலுலகங்களையும் விளக்கக் கூடியது. அந்த சத்தத்தி லிருந்து ஒரு சக்தி பிறக்கிறது.

'நாராயண', 'நமசிவாய' என்னும் சொற்களில் அமுதம் ஊறிக்கொண் டிருக்கிறது. சாகாம லிருக்கும் அமுதம் மனிதனுக்குள்ளேயே இருக்கிறது. அந்த அமுதம் ஜோதியிலிருந்து சுரக்கிறது. ஜோதி சொல்லி லிருக்கிறது. உலக முழுவதும் ஜீவிப்பதற்கு மூலாதாரமானது வாயு. வாயு புத்திரர்களான ஜீவர்களுக்கு வாயுவாயிருந்து வாழ்விப்பவர் பகவானே.

(தொடரும்)

---

கள்ளமிலா தென்றும் கதறி அழைத்தக்கால்,
உள்ளத்(து) உறைவான் உருவாகி வாரானே.

# குண்டோதரனுக்கு அன்னம் இட்டது

[கி. வா. ஜகந்நாதன்]

அங்கயற்கண்ணி யம்மையின் திருமணத்துக்கு வந்தவர்களுக்கெல்லாம் அறுசுவை உண்டி வழங்கினர். யாவரும் வயிறார உண்டு மகிழ்ந்தனர். அப்போது சமையற்காரர்கள் மீனாட்சியிடம் வந்து, "அன்னையே, நாங்கள் சமைத்த விருந்துணவில் ஆயிரத்தில் ஒரு பகுதி கூடச் செலவாகவில்லையே! இன்னும் மலை மலையாக எல்லாம் மிஞ்சி யிருக்கின்றன" என்று கூறினார்கள்.

அதைக்கேட்ட அன்னை தன் கணவரை அடைந்து பணிந்து ஒதுங்கி நின்று மெல்லக் கூறலானாள்; "சுவாமி, தேவரீர் முப்பத்து முக்கோடி கணங்களுடனும் எழுந்தருள்வீர்கள் என்ற எண்ணத்தால் விருந்து சமைத்திருக்கிறார்கள். திருமணத்துக்கு வந்தவர்கள் யாவரும் உண்ட பிறகும் இமய மலையைப் போலச் சோறும், மற்ற மலைகளைப்போல ஏனைய உணவு வகைகளும் மிஞ்சி யிருக்கின்றன" என்றார்.

எம்பெருமான் சிறிதே புன்னகை பூத்தான். பிறகு, "முடியுடை மூவேந்தர்களினும் சிறந்த பாண்டியனுடைய மகளாகிய உனக்குக் கிடைப்பதற்கு அரிய பொருள் என்ன இருக்கிறது? தேவலோகத்துக் கற்பகமும் உன்னுடைய ஏவலுக்கு அடங்கி இங்கே இருக்கிறது. நின் செல்வச் சிறப்பை நாம் அறியும் பொருட்டு இவ்வளவு மிகுதியாக உணவைச் சமைக்கச் செய்தனை போலும்! இன்னும் உண்ணுவதற்கு

---

உள்ளும் புறம்பும் தெய்வம் உருவாமேல்,
வள்ளியனாய் ஆன்மா,தான் வாழுமிது நிச்சயமே.

உரிய பசி உடையவராக யாரும் என்னுடன் வந்த கணங்களில் இல்லை. இதற்கு என்ன செய்வது?'' என்றான்.

இப்படிச் சொன்னவன் அருகில் தனக்குக் குடை பிடித்துக் கொண்டிருந்த பூத கணத்தைச் சேர்ந்தவனாகிய குண்டோதரன் வயிற்றில் பெருந் தீயைப் புகச் செய்தான். அதனால் மிகவும் வருந்திய அவன், ''ஐயனே, எனக்குப் பசிக்கிறது'' என்று சொன்னான்.

இறைவன் உடனே மீனாட்சியைப் பார்த்து, ''இவனுக்கும் பசிக்கிறதாம். இவனுக்கு ஒரு பிடி சோறு இடுங்கள். பிறகு செய்வதை அப்பால் சொல்கிறோம்'' என்று சொல்ல, பிராட்டி குண்டோதரனை அழைத்துக்கொண்டு செல்லும்படி ஏவலரைப் பணித்தாள். அவன் கடும்பசியுடன் நடை தளர்ந்து, கண் புகைந்து, வாய் புலர அவர்களுடன் சென்றான். ஏவலாளர்கள் அவனைக் கொண்டு போய்ச் சோற்று மலையின் முன் விட்டார்கள். அங்கே அவன் உட்கார்ந்தது தான்; அடுத்த கணத்தில் அங்கே இருந்த அவ்வளவு பெரிய அன்னக் குவியலும் இருந்த இடம் தெரியாமல் போய் விட்டது.

இதைக் கண்டு யாவரும் ஆச்சரியப்பட்டுப் போயினர். மகளிர் அஞ்சி ஓடினர். குண்டோதரன் சோற்றை உண்டதோடு அங்குள்ள கறி, கூட்டு, வறுவல், குழம்பு எல்லாவற்றையும் அப்படி யப்படியே எடுத்து வாயில் கவிழ்த்துக் கொண்டான். பால், தயிர், நெய் முதலியவற்றையும் எடுத்து விழுங்கினான். அப்பொழுதும் அவன் பசி தீரவில்லை. அங்கே குவித்திருந்த பல வகையான பழங்களை வாரி உண்டான். கரும்பை விழுங்கினான். பச்சைக் காய் கறிகளை எடுத்து உண்

---

உள்ளரங்கில் தெய்வம்; உலகரங்கில் நாயடியேன்;
விள்ளுகின்ற ஆடலில், வேற்றுமைதான் எத்தனையோ.

டான். அரிசியையும் வாய்மடுத்து உண்டான். இப்படி அங்குள்ள பண்டங்கள் யாவற்றையும் எடுத்து எடுத்து வயிற றுக்குள் பெய்தும் அவனுடைய பசி அடங்கவில்லை; நெய்யை ஆகுதி செய்ய வேள்வித்தீ ஓங்குவதுபோலப் பசி பின்னும் மிகுதியாயிற்று.

இதைக் கண்டு அதிசய முற்ற எம்பெருமாட்டி, தன் கணவன் முன் சென்று நாணத்துடன் தலை கவிழ்ந்து நின்றாள். அவளைக் கண்ட பெருமான் ஒன்றும் அறியாதவனைப்போல், "அவன் உண்டு இன்னும் உணவு மிஞ்சியிருந்தால், இன்னும் உள்ள பூதங்களை அனுப்புகிறேன்" என்றான்.

அம்மை, "சுவாமி, அந்தக் குட்டைப் பூதம் அங்கே இருந்த உணவு முழுவதையும் உண்டும் அதன் பசி அடங்கின பாடில்லை. இன்னும் மற்றக் கணங்களையும் விடுவீர்களானால் இந்த உலகம் முழுவதும் விழுங்கி விடுவார்கள் என்று சொல்லிக் கொண்டிருந்தபோது குண்டோதரன் அங்கே வந்தான். "எம்பெருமானே, எம்பிராட்டி சமைத்து வைத் திருந்த உணவை யெல்லாம் உண்டும் இன்னும் என்பசி தீர வில்லையே! பிறருக்கு இட்டு உண்ணாதவர் வயிறுபோல என் வயிறு எரிகிறதே! தேவரீர் திரிபுரங்களில் இட்ட தீயே என் வயிற்றுக்குள் புகுந்ததோ, என்னவோ தெரியவில்லையே!" என்று கதறினான்.

---

பாடுதலில், ஆடுதலில் பத்தி பரிணமிக்க,
நீடும் திருவருள், நேர்நிற்கும் நிச்சயமே.

# குமாரஸ்தவ விளக்கம்

(திருப்புகழ் சதுரர் சே. த. ராமலிங்கம் பிள்ளை, B.A., B.T.)

## நய நய பதயே நமோ நம :

நயம் - உயர்ந்த; நயம் - இனிமையைச் செய்கிற; பதயே - தலைவனுக்கு ; நமோ நம - போற்றி ! போற்றி !

## இனிமை தருவன எவை ?

மக்கள் மனம் இனியவற்றையே விரும்புகிறது. ஆனால் இனிமை தரும் பொருள்கள் மனநிலைக்கேற்பப் பலவேறாகக் காட்சி யளிக்கின்றன. கனியும், பாகும், கற்கண்டும் சிலருக்கு இன்பம் செய்யும் ; மற்றும் சிலருக்கு மலர் சூடிய மாதர்களால் இன்பம் மலரும் ; இன்னும் சிலருக்கு அதிகாரம், அந்தஸ்து, பட்டம், பதவிகளால் இனபம் எய்தும். வேறுசிலருக்கு மனைவி, மக்கள், கிளை, கேளிர்களால் இன்பம் விளையும்.

## இனியர் யார் ?

உணவினால் வரும் இன்பம் உண்ட மறுகணத்தே மறைந்தொழியும் ; உடை முதலியனவும் கட்டிக்கழிக்கும் தன்மையுடையனவே. மாதர் இன்பம் மாறும் தகையது. பட்டமும் பதவியும் நிலைத்தவை அன்று. மனையும், மக்கள் தாமும் பூரண இனிமை தரும் பொருளல்லர். கிளையும் கேளிர் சதமல்ல. ஒருவனுக்கு மிக்க செல்வம் இருக்கும்போது அவனது சுற்றத்தவர் வானத்திலுள்ள நட்சத்திரங்களைவிடப் பெருங்கூட்டமாகச் சூழ்ந்து இருப்பர். கைவறண்ட காலத்தில் நீர் அற்ற குளத்தை விட்டு நீங்கிப்போம் பறவைகளைப்போல் மறைந்து போவர்.

" காலாடு போழ்தில் கழிகிளைஞர் வானத்து
மேலாடு மீனில் பலராவர் "

என்பதை உன்னுக.

---

சிறந்த ஜபத்தால், சித்தசுத்தி சித்தி;
நிறந்த நிலையதனில், ஓமொலிக்கும் நிச்சயமே.

எனவே உணவு, உடை, வீடு, மாடு, மனை மக்கள், பட்டம் பதவி இவையனைத்தும் இனியன அல்ல. நமக்கு நாமாவது இனிமை செய்து கொள்ள முடியுமா? அதுவும் இல்லை. பிறர் செய்வது ஒரு சமயம் துன்பந் தரலாம். நாமே நமக்கு துன்பஞ் செய்து கொள்ள எண்ண மாட்டோம். ஆதலால் நமக்கு இனியர் நாமே என்னலாம் அல்லவா? முடியாது. நாம் நமக்கு இன்பந் தருவன எவை என்று அறியும் ஆற்றலுடையவரல்ல. நமது அறிவு மிகச் சுருங்கியது. முக்காலங்களை உணரும் முனிவர்களும் கூட நன்மை பயக்கும் என்று எண்ணியவை தீமை தந்துள்ளன. வசிட்டர் முதலிய விசிட்டர்கள் எல்லாம் இராமனுக்கு முடி சூட்டி இன்பம் செய்யவென அமைத்த நாள், இராமனை அன்று நாட்டில் தங்கவும் விடாமல் காட்டுக்கே செல்லும்படி முடிந்ததை எண்ணிப் பாருங்கள். எனவே, நாம் இனிமைசெய்யும் என்றெண்ணுபவை, தீமையும் செய்கின்றன. அதனால் நாமே நமக்கு இனியர் என்னலும் பொருந்தாது.

## என்னில் இனியர் யார்?

இனியர் யார் என்று அருள்நெறிநின்ற அப்பரடிகள் ஆராய்ந்து முடிவு கட்டுகிறார். படியுங்கள்.

'கனியினும் கட்டி பட்ட கரும்பினும்
பனிமலர்க்குழல் பாவை நல்லாரினும்
தனிமுடி கவித்தாளும் அரசினும்
இனியன் தன் அடைந்தார்க்கு இடைமருதனே

[பழம், கரும்புக்கட்டி (வெல்லம்), குளிர்ந்த மலரணியும் கூந்தல் மாதர்கள், ஏகசக்கராதிபனாய் முடி சூடி ஆளும் அரச போகம் அனைத்தினும், தன்னடைந்தார்க்கு இன்பம் தரும் இடைமருதூர் ஈசன்தான் சாலவும் இனியன் ஆகும்.]

---

அருட்கனல் ஊற்றெடுக்க, இச்சை அவிந்துபோம்;
இருட்டுக் குருட்டுமலம், ஏமாந்து போகுமரோ.

" என்னில் யாரும் எனக்கினி யாரில்லை
என்னிலும் இனியான் ஒருவன் உளன்
என்னுளே உயிர்ப்பாய்ப் புறம் போந்துபுக்கு
என்னுளே நிற்கும் இன்னம்ப ரீசனே "

[என்னைவிட எனக்கு இனியவர் எவருமில்லை. என்னைவிட இனியன் ஒருவன் இருக்கிறான. (அவன் யாரெனில்,) எனக்குள்ளே மூச்சாக வெளிவந்து புகுந்து என்னுள் கலநது நிற்கும் இன்னம்பர் என்ற தலத்தி லெழுந்தருளியுள்ள சிவபிரானே]

எனவே இனிமை தருபவனும் இன்பமயமாக உள்ளவனும் என்றும் நம்மிடத்தினின்றும் நீங்காத இறைவனே என்று அறிகிறோம். இக்கருத்தில்தான் பாம்பனடிகளாரும் உயர்ந்த இனிமையைச் செய்கின்ற தலைவனுக்கு (குமார பெருமானுக்கு) வணக்கம் சொல்கிறார்.

## நியாயக்காரன்

2. நயம் என்ற சொல்லுக்கு நீதி என்றொரு பொருளுண்டு. 'இது நாயமா ?' என்று இச்சொல் திரிந்து கிராமிய வழக்கில் வந்ததா என்பது ஆராயத் தக்கது. இப்பொருளில் நய நய பதயே என்றால் நீதியை விரும்பும் தலைவன் எனப் பொருள்படுகிறது. நீதிமானாக விளங்கும் முருகனது தலமும் நீதி தழைக்கும். அவனது படையும் நீதியை ஆராயும். இக் கருத்துக்களை,

" ஏழையின் இரட்டைவினை ஆயதோர் உடல்சிறை
இராமல் விடுவித்தருள் நியாயக்காரன் "

[எளிய எனது இருவினையாலான பிறவியான சிறையில் வருந்தாமல் எனக்கு விடுதலை வழங்கி யருளும் நீதிபதி யானவன்] (வேலைக்கார வகுப்பு.)

சேலம் மாவட்டத்தைச் சேர்நத திருச்செங்கோடு என்னும் திருத்தலத்தில் 'சத்தியவாககிய பெருமாள்' என்ற பெயருடன்,

---

கடவுளை நம்பில், அருளுதிக்கும்; கண்ணியமில
மடவர்களை நம்பில், மருள்மயமாம் வாழ்க்கையரோ.

சண்முக நாதன் வழக்குகளைத் தீர்க்கும் நியாயாதிபதியாக விளங்குவது கருதத் தக்கது.

மேலும் அவன் எழுந்தருளியுள்ள திருப்போரூரும் நீதி வளர்க்கும் என்பதை,

" ஏதுபிழை செய்தாலும் ஏழையேனுக் கிரங்கித்
தீது புரியாத தெய்வமே—நீதி
தழைக்கின்ற போரூர்த் தனிமுதலே நாயேன்
பிழைக்கின்ற வாறு நீபேசு "

என்று ஸ்ரீ சிதம்பர சுவாமிகள் திருவாக்கு தெளிவாக்குகிறது. விராலிமலை வேலன் திருவுருவைச் சொல்லோவியமாக விளக்கிக் கூறும்போது, " ஆராயும் நீதி வேலும் " என்று அப்பிரானது படைக்கலமும் நீதி வழங்குதலை அருணகிரியார் நினைவூட்டுகிறார். இதனால் நீலமயிலோன் நியாயம்—நீதிநெறி விழையும் தலைவன் என்பது புலனாம்.

மற்றொருவகை :

3. நயம் - மேன்மையான, நயம் - இலாபத்தை (அடியவர்க்குச் செய்யும்), பதயே - தலைவனுக்கு, நமோநம - போற்றி ! போற்றி !! என்னலும் ஆம். மேன்மையான லாபம் என்பதால் வணிகத் துறையில் வரும் அற்பலாபம் அல்ல; என்றும் அழியாத பேரினபம் நலகும் ஆன்மலாபம் என்று கொள்க. அன்பர்கட்கு ஆன்மலாபமான மோட்சத்தை விரும்பி யளிப்பவன் வேலன் என்று ஆகிறது. முருகன் ' முத்திக்கொரு வித்து ' ஆதலின்.

பிறவகை :

நயம் என்ற சொல்லுக்கு அழகு, பொலிவு, அருள், மகிழ்ச்சி முதலிய பொருள்களுமுள்ளன. குமாரமூர்த்தி, தன் அடியார்கட்கு அழியாத அழகு (வயிரயாக்கை), பிரம்மதேசசு, வற்றாத அருள், மாறாத மகிழ்ச்சி முதலியவற்றை விரும்பிச் செய்பவன் என்றெல்லாம் கொள்ளலாம்.

சிவபுரம்

# திருப்புகழ் விரிவுரை

(குகஸ்ரீ)

மனமெ னும்பொருள் வானறை கால்கனல்
புனலு டன்புவி கூடிய தோருடல்
வடிவு கொண்டதி லேபதி மூனெழு வகையாலே-
வருக கந்துய ராசையி லேயுழல்
மதியை வென்றுப ராபர ஞானநல்
வழிபெ றும்படி நாயடி யேனைநி னருள்சேராய் ;
செனனி சங்கரி ஆரணி நாரணி
விமலி யெண்குண பூரணி காரணி
சிவைப ரம்பரை யாகிய பார்வதி அருள்பாலா !
சிறைபு குஞ்சுரர் மாதவர் மேல்பெற
அசுரர் தங்கிளை யானது வேரற
சிவனு கந்தருள் கூர்தரு வேல்விடு முருகோனே !
கனக னங்கையி னுலறை தூணிடை
மனித சிங்கம தாய்வரை பார்திசை
கடல்க லங்கிட வேபொரு தேயுகிர் முனையாலே-
கதற வென்றுடல் கீணவ னுருயி
ருதிர முஞ்சித றுதமு தாயுனு
கமல வுந்திய னுகிய மால்திரு மருகோனே !
தினக ரன்சிலை வேளருள் மாதவர்
சுரர்க ளிந்திர னுரு காதிபர்
திசைமு கன்செழு மாமறை யோர்புக ழுகோனே !
திரும டந்தையர் நாலிரு வோர்நிறை
அகமோ டம்பொனி னுலய நீடிய
சிவபு ரந்தனில் வாழ்குரு நாயக ! பெருமானே !

---

அன்பையே காணிக்கை யாக்கில், அருளாளன்
இன்ப அமுதூட்ட, எதிர்வருதல் நிச்சயமே.

(பதவுரை.) (செனனி......அருள்பாலா!)

(1) செனனி - (அகில உலக) தோற்றங்கட்கு ஆதாரம் ஆனவர் ;

(2) சங்கரி - (ஆன்மாக்களின்) அயர்வு அகற்றும் அன்னை ;

(3) ஆரணி - வேதமே யான வித்தகி ;

(4) நாரணி - (நலம் தரும்) நீர்மய நம்பெருமாட்டி ;

(5) விமலி - குற்றமே இல்லாத குணவதி ;

(6) எண்குண பூரணி - (நித்திய மங்கள) எட்டுக் குணம் நிறைந்தவர் ;

(7) காரணி - எச்செயற்கும் காரணமாக இருப்பவர் ;

(8) சிவை - சிவனார் இடத்தில் இருக்கும் செல்வி (என்றெல்லாம் சிறப்பிக்கப் பெறும்) ;

(9) பரம்பரை ஆகிய பார்வதி அருள்பாலா - (நவசக்திகளின்) வழிவழி மலரும் மலைமகள் அருளிய மகனே !

சிறை புகும் சுரர் - சிறைக் கோட்டத்துள் புக்கிருந்த இமையவர் (விண்ணுலகு எய்தவும்) ;

மாதவர் மேல் பெற - வித்தகத் தவத்தினர் வீடு பேறு அடையவும்.

அசுரர் தம் கிளையானது வேர் அற - அவுணர்களுடைய (வளர்ந்து பெருகி வாழ்) இனம், அடியற்று நுனியற்று அழியவும் ;

சிவன் உகந்து அருள் கூர்தரு வேல்விடு முருகோனே - சிவபிரான் உவகையுடன் அருள் மிகுந்து அளித்த (ஞான) வேல் ஏவிய இளம் பரிபூரண !;

---

அருளின்பத் தால்படைத்து, ஆடலின்பத் தால்காத்து,
மருள்துன்பை மாற்றவரும் மாதேவர் பேரருளே.

(கனகன்......................மருகோனே !)

கனகன் அம் கையினுல் அறை தூண் இடை மனித சிங்க மதாய் - இரணியன் உள்ளங் கையால் அறைந்த தூணின் நடுவில், (வீர) நரசிங்கமாக வெளிப்பட்டு ;

(அம்கை - அகங்கை ; உள்ளங்கை.)

வரை பார் திசை கடல் கலங்கிடவே பொருதே - (எண் திசை) மலைகள், நிலவுருண்டை, (எட்டுத்) திக்குகள், (ஏழு) கடல்கள் யாவும் புழுங்கிக் குமுறுமாறு போர்செய்து ;

வென்று கதற உகிர் முனையாலே உடல் கீண் - வெற்றி பெற்று, கதறுமாறு (அவன்) உடலை (விரல்களின்) நக நுனி யால் கிழித்து ;

அவன் ஆர் உயிர் உதிரமும் சிதருது அமுதாய் உணும் - அந்த இரணியனது அரிய உயிரையும், இரத்தத்தையும் சிந்தாதபடி, (பயனுன) அமுதாகப் பருகிய ;

கமல உந்தியன் ஆகிய மால் திரு மருகோனே - உந்திக் கமலத்தர் ஆன (மாபெரும்) திருமாலின் மருகனே !;

(தினகரன்.................புகழ் அழகோனே !)

தினகரன் - (ஒவ்வொரு) பகலையும் உண்டாக்கும் சூரியனும் ;

சிலைவேள் - (கரும்பு வில், புட்ப) வில்களால் உலக இச்சையை உண்டாக்கும் காமனும் ;

அருள் மாதவர் - தனிப்பெரும் கருணைத் தவசிகளும் ;

சுரர்கள் இந்திரனர் - வானவர்களும், (அவர்களது தலை வனன) இந்திரனும் ;

உரக அதிபர் - நாக லோக (நலம் சிறந்த) தலைவர்களும் ;

திசைமுகன் - நான்கு திசை நோக்கிய நான்கு முகங்களை யுடைய பிரமனும் ;

---

நான்செய்தேன் என்னும் அகந்தை நகர்ந்(து,)எதுவும்
தான்செய் அருளாடல், என்றறிவர் தக்கோரே.

செழு மாமறையோர் புகழ் அழகோனே - வளமார் வைதிக வேதியர்களும், புகழும் அழகு பூரிப்பவனே !

(திருமடந்தையர்....................பெருமாளே !)

திருமடந்தையர் நால் இருவோர் நிறை அகமொடு - ஐஸ்வர்ய சொரூபமான அஷ்ட லக்ஷ்மிகள் மகிழ்ந்து நிறைந்த மாளிகைகளுடன் ;

அம்பொனின் ஆலயம் நீடிய - அழகிய பொன்மயமான திருக்கோயில் அற்புத மகிமை பெற்று அமைந்த ;

சிவபுரந்தனில் வாழ் குரு நாயக - சிவபுரத்தில் வாழ்கின்ற (நலம் சிறந்த) குருநாதா !;

பெருமாளே - பெருமையில் உயர்ந்த பெரியோனே !;

(மனமெனும்.................மதிலை வென்று)

மனம் எனும் பொருள் - மனம் எனப் பெறும் (ஒரு) நுண் பொருளுடன் ; (பொருள் - தத்துவம் என்பதன் மொழிபெயர்ப்பு.)

வான் - (விரிந்து எங்கும் விளங்குகின்ற) விண் ;

அறை கால் - (அவ் விண்ணில் எங்கும் வியாபகமாகி) வீசும் காற்று ; (அறைதல் - வீசுதல், கால் - காற்று.)

கனல் - (அக்காற்றின் நெருக்கில் பிறக்கும்) நெருப்பு ;

புனல் - (அந்நெருப்பின் புழுக்கத்தில் உதிக்கும்) நீர் ;

உடன் புவி - (மகததான) நீரில் இருந்து பிறக்கும் மண் ; (எனும் ஐந்து பூதங்களும்) ;

கூடியது ஓர் உடல் வடிவு கொண்டு - ஒன்று சேர்ந்து ஒரு உடல் என உருவம் தாங்கி ;

அதிலே பதிமூணெழு வகையாலே வரும் - அவ்வுடலில் தொண்ணூற்றொரு தததுவங்களின் தொடர்பால் தோன்றுகின்ற : ($13 \times 7 = 91$)

---

உண்மைப் பொருளான தெய்வத்தை, உள்ளன்பால்
எண்ணுகின்ற சீர்த்தியை, ஏத்துகின்ற(து) இவ்வுலகே.

சுகம் துயர் ஆசையிலே உழல் மதியை வென்று - சுக துக்கங்கட்கு மூலமான ஆசைகளில் சுழன்று அயர்கின்ற அறிவை மடக்கி யடக்கி;

(பராபர......சேராய்!)

பர அபர ஞான நல் வழி பெறும்படி - பேருன கலை ஞானம், சிவஞானம் (இரண்டும் அடியேன்) பெறுமாறு; (அபரஞானம் - கலையறிவு; பரஞானம் - பதிஞானம்.)

நாய் அடியேனை நின் அருள் சேராய் - (ஒவ்வொன்றிலும்) நாய்போல் அடிமைப்படும் எளிய என்னை, (சிறந்த) நினது திருவருளில் சேர்த்தருள், (எ-று).

விரிவுரை.

சீறிய விதி சிரித்தது. அதன் பயனாக, புலால் உடலில் உயிர் புகுந்தது. வருந்தி அங்கு வளர்ந்தது. பேதையாகிப் பிறந்தது. புலைமகள் மகன் புலையன் எனும் புகழைப் பெற்றது. "ஊனே றெலும்பு சீச்சீ, நரம்புக ளோடே எழுந்த கசுமாலம்" என்று, பாவலர் பாடும் பரிசை யடைந்தது. தன் சரிதையை மறந்து தருக்கியது.

வாயால் கர்மத்தை வளர்த்தது. செயலால் வினைகளைச் சேர்த்தது. ஒரு சில நாள்வரை உலவியது. உருண்டு புரண்டது. காலம் வந்தது. உடலைப் பிரிந்தது. சீறிய விதி பழையபடியே சிரித்தது. இதுதான் எங்கள் சுய சரித்திரம்.

குமரா! எங்கள் அன்னை புலைமகள்; நினது அன்னை மலைமகள். எனை யளித்தவள் ஊனமகள்; நினை யளித்தவள் ஞானமகள். என்னை யீன்றவள் மருள் வடிவி; நின்னை யளித்தவள் அருள் வடிவி. நாற்றக் கருவில் வைத்து என்னை ஒருத்தி ஈல்கினள்; உனது அருளன்னை, அரிய சங்கற்ப ஆற்றலால், ஆநந்தமான நின்னை, சத்தும் சித்துமான சேயாக்கி அளித்தாள்.

---

காமம் சினம்கர்வம் மூன்றும், களங்கநிலை;
சாமளவும், துக்க சலனமெனல் கண்டாமே.

நாங்கள் கீழ்நோக்கிப் பிறந்தவர்கள்; நீ ஆறு பொறிகளாகி அந்தரத்தில் உதித்தாய். காற்றில் கலந்தாய். கனலில் புகுந்தாய். நீரில் நிறைந்தாய். நிலத்தில் நடந்தாய். ஐம்பூதங்கட்கும் அமைதி யளித்து, பரிதி மதிகளைப் பரிசுத்தம் ஆக்கி, ஆன்மாக்கட்கு அறிவு கற்பிக்க, அரிய முறையில் இப்படி அவதாரம் செய்தாய். ஊன்றி இவைகளை உணர்கிறோம்.

மலைமகள் அருள் பாலா! என்று, உன்னை வாழ்த்திப் பாடுகிறது எங்கள் வாய். மலைமகள் ஆக்கம், ஓத ஒருநாப் போதுவதோ?

கண்கட்குப் புலனாகும் உலகைக் காண்கிறோம். மரம் செடி கொடிகள், விலங்கினங்கள், பறவைக் கூட்டங்கள், மனித சமுதாயம். ஆம். பகலெல்லாம், இவைகளின் ஆரவாரப் படபடப்பு. உலகம் முழுவதும், இரவில் அடங்கி உறங்குகின்றன. விடிகிறது பொழுது; விழிப்பு விளைகிறது. உடனே பழைய விறுவிறுப்பு; என்ன விசித்திரமான சிருஷ்டி?

அரிய பெரிய இவ்வுலகை அளித்தவர் யார்? வித்தின் சக்தியி லிருந்து, இவைகள் விளைகின்றன. சத்துப் போனால் செத்துப் போகும். இவைகட்கு எல்லாம் மூல காரணமாகி முறுவலிக்கின்றாள் பராசக்தி. "அவளால் வந்த ஆக்கம் இவ் வாழ்க்கை யெல்லாம்" என்று அறிகிறோம். ஜனனி என்று, அத்தேவியின் நாமநலத்தை ஜபிக்கிறோம்.

இவ்வுலகில், முச்செல்வங்கள் இருக்கின்றன. ஒன்று மண்; அடுத்தது பெண்; மற்றொன்று பொன். சிறப்பாக இவைகளைப் பெற்றார் சிலர்; பெறாதார் பலர். பெற்றவரும் நிறைவு பெற்றிலர்; பெறாதார் விடுவது பெருமூச்சு. இறுதியில் தொடர்வது எதுவும் இல்லை. இருதிறத்தவரும் இதை அறிவர். அறிந்ததை மறப்பர். ஏமாந்து எங்கும் ஏங்குகின்றனர்.

---

ஆணவப் பிண்டமென உள்ளம் அழியாமல்,
ஆண்மையிறை ஆலயமா ஆக்குவது நல்வழியே.

இரவும் பகலும் இவைகளால், தொல்லைகள் பல தொடர் கின்றன. ஏராளமான வேதனைகளை எய்தி, ஆன்மாக்கள் அளவிலா அயர்ச்சியை அடைகின்றன.

கருணை யுடைய ககன வடிவி, இப்பரிதாபத்தைக் காண் கிருள். இளைப்பகற்ற எண்ணுகிருள். விரைகின்ருள். அரிய மரணத்தை அளிக்கின்ருள். மரணம் என்பது மவுன அடைக் கலம். [ம் + அரணம் = மரணம் ; ம் - மவுனம் ; அரணம் - காப்பு.]

" உறங்குவது போலும் சாக்காடு ; உறங்கி
விழிப்பது போலும் பிறப்பு."

என்பது, நித்திய இளைப்பாற்றும் நிலை. மரணம் என்பது, சிலகாலம் அயர்வகற்றும் செய்தி. சர்வ-சம்மாரம் என்பது. பலகாலம் களைப்பாற்றும் பண்பு. இச்செயல் செய்யும் இறை வியை, சங்கரி என்று ஏத்திப் போற்றி இறைஞ்சும் உலகம்.

வழிமுறை யறியாது, உயிர்கள் வருந்துவது அறிந்தாள். அவைகட்கு, வாழும் முறையை வாக்கால் வகுத்தாள். அவ் வாக்கு, ஆரணம் என்று அறியப் பெறும்; அந்த ஆரணம் தந்தாளை, ஆரணி என்று உலகம் ஆராதிக்கின்றது.

தாபத்தால் உயிர்கள் தவிக்காதபடி, உண்ணுமாறு நாரம் ஊட்டி உபசரிக்கின்ருள். அந் நாரணியை, நம்பிக் கை குவிக்கின்றது நானிலம். (நாரம் - நீர்.)

'வித்திலாத சம்பிரதாயம் மேலுமில்லை கீழுமில்லை'; அதன் படி, உறுதத நல்வினையை ஊட்டுவாள் ; கறுத்த தீவினையைக் காட்டுவாள் ; அவைகளைக் காட்டி ஊட்டி, கன்மம் தீர, அந்த அமலை காரியப் படுத்துகின்ருள். இங்ஙனம் எதற்கும் காரண பூதையான அம்பிகையை, காரணி என்று குவித்த கைகொடு கும்பிடுவம்.

"மாசு அறுத்து, எம்மை ஆநந்த வாரிநீர் ஆட்டிப், புண்டைத் தேசுரு விளக்க வல்ல" அத்தேவி, இயல்பாகவே

---

உள்ளாழ்ந்து, தெய்வத்தை ஊன்றி உணர்தற்கே
உள்ளவுடல் ஈதென்(று,) உணர்வது(உ)யர் புண்ணியமே.

களங்கம் இல்லாதாள் ; அதனுடன், ஆன்மாக்களின் அழுக்கை அகற்றி ஆள்பவள் ஆதலின், விமலி என்று விநயம் காட்டுவம். மகாபுனிதை என்பது, இப் பெயர்ப் பொருள்.

மண் பெண் பொன் இவைகளையே மனனம் செய்து, அவைகளின் மயமாகும் ஆன்மா. அங்ஙனம் ஆகாமல், (1) தன் வயம் ஆதல் ஒரு தனிநிலை.

குருதி, நரம்பு, தோல் முதலிய எழுவகைத் தாதுக்களால் எய்தும் உடல் இந்த வுடல். நாற்றமாம் இத் தேகத்தை, அன்பு மயம் ஆக்குகின்றது ஆஸ்திகம். "அனபு பிழம்பாய்த் திரிவார்" என்று, கண்ணப்பரைச் சேக்கிழார் காட்டுகிறார். அந்நிலையை, (2) தூய உடல் ஆதல் என்று அறிவம்.

கோணைத்தனம் இல்லாதது குழந்தை மனம் ; என்றும் அந்நிலை எய்துமேல், அது (3) இயற்கை யுணர்வு எனப்பெறும்.

சிற்றறிவும் சிறு தொழிலும் சீவ சுபாவம் ; எங்கும் வியாபகமாகி, இருந்த இடத்தில் இருந்தே எதையும் சாட்சி மாத்திரமாக அறியும் நிலை, (4) முற்றும் உணர்தல் என்றாகும்.

"கருஎலாம் இன்றியே கருவெலாம் ஆயவன்
உருஎலாம் இன்றியே உருவெலாம் ஆயவன்"

என்றார் ஆளுடைய பிள்ளையார். பொன் பொன்னை விரும்பாது ; மண் மண்ணை விரும்புவது இல்லை. அதுபோல், என்றும் பாச சூழ்நிலையில் இருந்து, எப்பொருளிலும் பந்தம் இல்லாமை, (5) இயல்பாகவே பாசங்களின் நீங்குதல் எனப் பெறும்.

எவரெவர் எக்குற்றம் செய்தாலும், பெரிது மன்னிக்கும் பெருங்கருணையைப், பெரும் பேறு என்பம். அது, (6) பேரருளுடைமை என்னும் பெயர் பெறும்.

---

மானுடத்தில் தேவநிலை மன்ன, அருள், அன்பு,
வான்தூய்மை, வாய்மை, வளர்தியானம் செய்வோமே.

காலப் போக்கிற்குத் தக்கபடி, ஆற்றல் எவர்க்கும் குன்றி அடங்கும்; பெருஞ்சக்தியை என்றும் பெற்றிருக்கும் ஒருநிலை, (7) முடிவிலா ஆற்றல் எனப் பெறும்.

சிறு சிறு இன்பத்தில் சிதைவு பெறாமல், கரைகாணா இயலாத கம்பீர இன்பம் காணும் நிலை, (8) வரம்பிலா இன்ப உடைமை என்று வழங்கும்.

இந்த எண்குணப் பண்பு நிறைந்த இறைவியை, எண்குண பூரணி என்று ஏத்திப் போற்றி இறைஞ்சும் உலகம்.

வகர வடிவாய், சிவத்தின் இடத்தில் வாழும் செல்வியை, சிவை என்று எண்ணிச் சிந்தை குளிர்வம்.

இந்த நவசக்தி பரம்பரை யாகிய பார்வதி அருளிய பாலா! என்று ஓதும்போதே உள்ளம் மகிழ்ந்து துள்ளுகின்றதே!

மேல் இருப்பாரை, அசுர உலகம் கீழ் இழுத்தது. அநியாயமாகச் சிறையில் அடைத்தது.

மோட்டுப் பூச்சிகள், கொசுக்கள் போலும் கெட்டது எல்லாம் கிளைகிளை யாயின. நல்லார் பல்லோர் அதனால் நைந்தனர்.

அருளுலகம் அதை அறிந்தது. ஜகஜகஜ் ஜோதி கயிலையில் எழுந்தது. அதன் அண்மையில் பெருகியது அருள் வெள்ளம். சொருப இந்நிலையின் பெயர் சிவம். அச் சொருபம் தடத்த வடிவில் தழைத்தது. அந்நிலையில் அதன் பெயர் சிவன் என்று அறியப் பெறும்.

அந்தச் சிவபிரான், உவகை மிகுந்து, ஞானசக்தியை உம்மிடம் உதவினர்.

எடுத்தனை. அந்த வேலை ஏவினை. விரைந்த அந்த ஞானவேல், இமையவரை விண்ணில் ஏற்றியது. அருந்தவ முனிவர்களை, தபோ லோகத்திற்கு அனுப்பியது. அசுரர் கூட்டத்தை, அடிபாதலத்திற்கு அனுப்பி வைத்தது.

---

*சித்தத்(து) அலைகளால், செம்மை சிதறாமல்,*
பத்திநிலை ஓங்கிப் பழுக்கின்றார் பண்ணவரே.

தெய்வம் இல்லை என்பது நாஸ்திகம். நானே தெய்வம் என்பது நாஸ்திகம் அல்ல; அது ஆஸ்திகமும் அல்ல. பணத் திமிர், பதவிச் செருக்கு முதலியன, இப்படிப்பட்ட எண்ணத்தை எழுப்பும். இரணியம் என்பது பொன்; அதை யுடையவன் இரணியன். 'பொல்லார்க்குக் கல்விவரில் கருவம் உண்டாம்; அதனோடு பொருளும் சேர்ந்தால் சொல்லாதும் சொல்ல வைக்கும்; சொல் சென்றால், குடிகெடுக்கத் துணிவர் கண்டாய்!'

நானே கடவுள் என்று, வீறு கூறினன் இரணியன். அதை ஒத்துக் கொள்ளாதவரை உபத்ரவப் படுத்தினன். சிங்க முகமாகித் திருமால் சீறினர். அஸ்தமனம் ஆயது இரண்ய வாழ்வு. இறுமாப்பினர்க்கு, இஃது ஒரு எச்சரிக்கை. அதர் மத்தை அழிக்கும் அவரது மருகனாகிய உன்னை, திருமால் மருகோனே! என்று தினமும் துதிப்பம்.

பகலைச் செய்பவர் பரிதியர். அழகில் உயர்ந்தவன் அநங் கன்; அருளை அழகென உடையவர் அருந்தவர்; வனப்பு மயமானவர் வானவர்; இந்திரர் அழகு இயம்பும் தரத்ததோ? ஆதிசேடன் முதலிய நாகலோகத் தலைவர்கள் பொலிவே பொலிவு என்று புகல்கின்றார் பலர். நான்முகன் அழகு நவில இயல்வதோ; அழகின் மிகுந்தவர் அந்தணர். மதி யுடைய அவர் நாவில் மறையுளது; மறையுள் மா எனப் பெறும் மகிமை யுளது; அம்மகிமையுள், செழுமை எனும் அழகு வளம் செழிக்கிறது. இவர்களெலாம், உனது பொலிவை எண்ணிப் புந்தி மகிழ்ந்துளர். அதை உணர்ந்து,

தினகரன்............செழுமா மறையோர் புகழ் அழகோனே!
என்று, உனது அருமையை உணர்ந்து ஆராதிப்பம்.

தனலக்ஷ்மி; தான்யலக்ஷ்மி; ஞானலக்ஷ்மி; விஜயலக்ஷ்மி; வீரலக்ஷ்மி; தைரியலக்ஷ்மி, கீர்த்திலக்ஷ்மி; ராஜ்யலக்ஷ்மி

---

மக்கள் அனைவரையும் தாமா மதித்திட்டால்,
துக்கம் தொலையும், தோன்றுமின்பம் கண்டறியே.

எனும் அஷ்டலக்ஷ்மிகள், இருந்து வாழும் மாளிகைகள் சிவபுரத்தில் இருக்கின்றன.

அப்பதியில், பொன்மயமான ஒரு திருக்கோயில். அந்த ஆலயத்தில், வாழ்வின் வைபவமான குருநாயகமே! பெருமையில் உயர்ந்த பெரியோனே! கேண்மையேன் செய் விண்ணப்பம் கேட்டருளும்!

மனம் என்பது ஒரு உள்பொருள். அதன் சங்கற்பத்தால், ஐம்பூத உடல் கொண்டேன்; தத்துவங்கள் 36; அவைகளின் உறுப்பான சேர்க்கைகள் 60; அத் தொண்ணூற்றாறு தத்துவங்களுள், சிவதத்துவம் ஐந்து; சிவதத்துவங்கள் நீங்கலாக, 91 தத்துவஙகளும், அடியேனை இவ்வுலகில் ஆட்டிப் படைக்கின்றனவே அரசே!

மோதும் இவைகட்குத் தப்பி, ஒருபடி மேல்ஏற இயலாத படி, எத்துணைச் சோதனைகள்? என் செய்வன் எளியேன்?

இதன் மேல் உள்ள சிவ தத்துவங்கள் ஐந்தும், வா! வா! என்று, சால்பான பரிவு காட்டி சமிக்ஞை செய்கின்றன.

இத் தொண்ணூற்றொரு தத்துவங்களால் விளையும் தொல்லைகட்கு, எல்லையே இல்லையே! ஆசை காட்டி இவைகள், அலைக்கழிக்கின்றனவே! அந்த ஆசைகளின் வயப்பட்டு, அறிவு அயர்ந்து போகிறதே!

அந்த அறிவை வயப்படுத்தி ஆள, இருவழிகள் இருக்கின்றன; ஒன்று, அருள் நூற்களின் உறவால் விளையும் அபர அறிவு; மற்றொன்று, கற்றவழி ஒழுகுவதால் விளையும் பரவுணர்வு. அருமை இந்நெறியை அடியேன் பெற, செம்மை நின் அருளில், இழுத்து என்னைச் சேர்த்துவிடு!

அதனால் மருள்தீரும்; மதிதெளியும்; அமைதி பெறுவேன்; ஆநந்தம் கொள்வேன் என்று, வீழ்ந்து பணிந்து விண்ணப்பித்தபடி.

வாழ்க திருப்புகழ் வளம்.

ஓம்.

## மயில் ஏறிய வானவன்

(கி. வா. ஜ.)

'மின்னலைப் போன்று கணத்தில் அழியும் இத்த வாழ்க்கையை நிலையானது என்று கருதி வாழ்கிறேனே! இது விதியின் பயனோ? இப்படி வாழ்கிற யான் எத்தகைய பாவியாகி விட்டேன்!' என்று வருந்தினர் அருணகிரியார்.

மின்னே நிகர் வாழ்வை விரும்பிய யான்
என்னே, விதியின் பயன் இங்கு இதுவோ ?

முருகனை அழைத்து இப்படிச் சொல்கிறார். அவனைப் புகழ்கிறார். அவன் தன் அடியார்களுக்கு மிகவும் மதிப்புடைய பொருளாக இருக்கிறான். உலகில் மதிப்புடைய பொருள்களிற் சிறந்தது பொன். மற்றவர்களுக்கெல்லாம் பொன் சிறந்தது; வாழ்வை விரும்புகிறவர்களுக்கு அது சிறந்தது. ஆனால் வாழ்வு மின்னல்போல நிலையாதது என்று எண்ணுபவர்கள் பொன்னைப் பெரிதாக மதிக்க மாட்டார்கள். அவர்களுக்கு இறைவனே பொன்னைப்போல இருப்பான். அவர்களுக்குரிய பொன் இறைவன்தான்.

பொன் மற்ற உலோகங்களைவிட ஒளிபடைத்தது. முருகன் ஒளிமிக்க திருமேனியை உடையவன். ஆனால் பொன்னினும் ஒளி சிறந்தது மணி. மதிப்பிலும் அது சிறந்தது. பொன்னைவிட அருமையாகக் கிடைப்பது மணி. ஒருவிதத்தில் இறைவனும் அத்தகையவனே. அவன் மிகமிக அரிய பொருள். ஆகவே அடியவர்களுக்கு அவனே மணியாக விளங்குகிறான். ஆதலின் அருணகிரியார் முருகனை,

---

உலகநிலை, சங்கிலிபோல் ஒன்றும் தொடர்பாம்;
கலகநிலை இன்றேல், களித்தெவரும் வாழ்வாரே.

பொன்னே! மணியே!

என்று விளக்கினார்.

பொன்னும் மணியும் அல்லாத பலபொருள்கள் மக்களின் மதிப்பிக்கு உரியனவாக இருக்கின்றன. மதிப்புடைய பொருள் யாவற்றையும் செல்வம் என்றும், பொருள் என்றும் உலகம் கூறுகிறது. நிலம் செல்வம்; வீடு செல்வம்; கார் செல்வம்; ஆடை, அணி, பாத்திரங்கள் முதலியனவும் பொருளின் வகைகளே. அடியார்களுக்கு யாவுமே இறைவன் தான்.

பொன்னே! மணியே! பொருளே!

என்று உருவகமாகச் சொல்லிக்கொண்டு வந்தார் அருணகிரி யார். 'அப்படியானால் உலகத்தில்தான் பொன்னும் மணியும் பொருள்களும் உள்ளனவே! அவற்றையே போற்றலாமே!" என்று யாராவது கேட்கலாமே! ஆதலால் தெள்ளத் தெளிவாக அந்தப் பொருள் இன்னதென்று சொல்லிவிட்டார்.

அருளே!

இறைவனிடமிருந்து நாம் பெறவேண்டிய செல்வம் அருள்தான். "செல்வாய செல்வம் தருவாய் மதுரைப் பர மேட்டி" என்று அதனைச் சொல்வார் திருஞான சம்பந்தர். ஆண்டவன் அருள் மயமாக, அருளாகவே இருக்கிறான்.

பொன்னே! மணியே! பொருளே! அருளே!

மேலே எம்பெருமானுடைய திருவுருவத்தைத் தியானம் செய்தார். எல்லாச் செல்வத்துக்கும் உரிய மன்னவனாகிய அவன் தான் இருந்த இடத்திலே இருப்பதில்லை. உலகில் உள்ள ஆருயிர்கள் உய்யும் பொருட்டு, அவன் உருவம் பூண்டு

---

பிறர்பசி தன்பசியாப் பேணி உதவத்,
திறமைமதி வேண்டும்; திகழின்பம் இங்குறுமே.

பல இடங்களுக்கு எழுந்தருளுகிறான். அதற்கு ஏற்றபடி அவன் மயில் வாகனத்தை உடையவனாக இருக்கிறான்.

மன்னே! மயில் ஏறிய வானவனே!

ஆண்டவன் மயிலின்மேல் ஏறி எப்போதும் அடியார்களை நாடிப் போய்க்கொண்டே இருப்பான். இன்ன நேரந்தான் அவன் அருள் செய்யும் வேளை என்ற வரையறை இல்லை. அவன் எந்த நேரத்திலும் அருள் செய்ய வருவான்.

"நீலச் சிகண்டியில் ஏறும் பிரான் எந்த நேரத்திலும்
கோலக் குறத்தி யுடன் வருவான்"

என்று கந்தர் அலங்காரத்தில் பாடுகிறார் அருணை முனிவர்.

இவ்வாறு அரிய பொருளாக இருந்தாலும் அன்பர்களுக்கு எளியவனாக மயிலின் மீது ஏறிவரும் பெருமானாகிய முருகனைப் பார்த்து, 'என்னை இந்த நிலையில் வைக்கலாமா?' என்று முறையிட்டுக் கொள்வதுபோல விண்ணப்பித்துக் கொள்கிறார்.

மின்னே நிகர்வாழ் வைவிரும் பியயான்
என்னே, விதியின் பயன்இங் கிதுவோ?
பொன்னே, மணியே, பொருளே, அருளே,
மன்னே, மயில்ஏ றியவா னவனே!

[பொன்னும் மணியும் பொருளும் போன்றவனே, அருள் வடிவாக உள்ளவனே, மன்னவனே, மயிலின்மேல் ஏறி வரும் தேவனே, மின்னை ஒத்த வாழ்வை விரும்பிய அடியேன் இவ்வாறு இருப்பது என்ன பாவம்! இது விதியின் பயனோ?]

இது கந்தர் அநுபூதியில் 27-ஆவது பாடல்.

---

குற்றம் மறந்து குணங்கொண்டு பாராட்ட,
முற்றும் அனுபவம் முன்னிற்க வேண்டுமரோ.

# 7. நல்லியக்கோடர்

(தணிகைமணி வ. சு. செங்கல்வராய பிள்ளை, M. A)

[ 'அருளார் நல்லியக்கோடர் [ஔவையார்க்] கடியேன்' ]

தமிழ் மறையாம் தேவாரப் பாக்களை உலகுய்ய அளித்த மூவரில் இருவர் (அப்பர், சுந்தரர்) தோன்றிய தவத்திரு நாடு "நடுநாடு" என்பது. இந் நடுநாட்டில் கிடங்கில் என்னும் ஊரைத் தலைநகராகக் கொண்டு அரசுபுரிந்தவர் திருமுருகன் அடியாராம் நல்லியக் கோடர் என்பவர். இவருடைய ஊர்களுள் ஒன்று மாவிலங்கை. இவர் ஓவியர் குடியிற் பிறந்தவர். முருகவேளை இடைவிடாது சிந்தித்து வழிபடும் திறத்தினர். மூவெழு வள்ளல்களும் ஓர் உருக்கொண்டு வந்தவரோ இவர் என்று வியக்கும்படி இவருடைய கொடைத்திறம் விளங்கிற்று. இவர் போரில் பல அரசர்களை வென்று வெற்றிமாலை சூடினர். தோல்வியுற்ற பல மன்னர்களும் ஒருங்குகூடி இவருடன் போர் செய்ய எழுந்தனர். நல்லியக் கோடருடைய சிறிய படை எதிரிகளுடைய பெரும் படையுடன் வெகு மும்முரமாய்ப் போர் புரிந்தும், நல்லியக் கோடருடைய படை தோற்றுப் புறங்காட்ட வேண்டி வந்தது. தமது படை அன்று தோல்வியுற்றதைக் கேட்ட நல்லியக் கோடர் மனமுடைந்து, "முருகா! அறத்தை மறம் வெல்லலாமோ? நீ அறமலி கடவுளின் புதல்வனாயிற்றே" எனக் கூறித்:-

"தொழும் அடியார்முன் தகத்தக என்று
சொலித்திடு மரகத மயில்மேல்
எழுமுழு முதலே! கலியுக வரதா!
இணையறு கருணைமாக் கடல்! நின்,
செழுமல ரடிபூண் தமியனைப் பகைவர்
செகுத்திடு மாறெழுந்தனர் இப்
பொழுதுனை யல்லாற் புகலிடங் காணேன்
புண்ணியா! ஆதரித்தருளாய்"

---

எத்தனையோ சோதனையை வென்றுமுன் னேறுகின்ற
உத்தமனை ஞாலம் உளமுவந்து போற்றும்மே.

"குன்றுதோறாடுங் குமர! நாயேன்றன்
குடிமுழு தாண்டமா மணியே!
இன்று நாயேனைப் பகைவர் சூழாமுன்
இனிதெழுந் தாதரித் திலையேற்
பொன்றுநாள் அளவும் உணவருந் தேனென்
புகலெனும் பூங்கழல் ஆணை" [சே-பு 386, 388]

என்று முறையிட்டு முருகன் சந்நிதியில் விழுந்து இறைஞ்சி அப்படியே துயில் கொண்டனர். அவருடைய கனவில் முருகவேள் தோன்றி, "அன்ப! உன் மனைக்கு அருகில் இருக்கும் கேணியில் உள்ள தாமரைப் பூ ஒன்றைக் கொய்து உன் பகைவர்கள் மீது ஏவு. நீ வெற்றி பெறுவாய்" என்று மறைந்தனர். அவ்வாறே நல்லியக்கோடர், மறுநாள் போரில் முன்னாள் இரவில் தமது கனவில் முருகவேள் சொல்லியவாறே தாமரைப் பூ ஒன்றை, ஆறெழுத்தை ஓதி, பகைவர் தம் படைகள் மீது எறிந்தனர். எறிந்த பூவின இதழ்கள் கொதி வேல்களாக மாறி, வீறுகொண்டு எழுந்து, சூறைக் காற்றைப் போலச் சுழன்று, தீக் கொப்புளித்து, பகைவர்களின் படைகளைத் தாக்கின. அவ்வேல்களின் தாக்குதலைத் தாளமாட்டாது ஓடினர் சிலபேர். தேருக்கடியில் ஒளிந்தனர் சிலபேர். உள்ளம் வாடினர் சிலபேர்.

"சிலர்கரம் இழந்தார், கழல் சிலர்
அற்றார், சிலர் உரம் அற்றனர், சிதைந்து
பலர்உயிர் இழந்தார், குறையுடலோடு
பலர்பதை பதைத்தனர், நாயும்
அலகையும் நரியும் கூளியுந் திருக்கூத்
தாடின அடுகளம் எங்கும்,
நல்லூறு பெரியோர்க் கூறுமொர் பாவலரை
நகைக்கல் நாயகன்கடன் அன்றே!

---

கடவுளபால் பக்தி, கனிந்தவர்பால் அன்பு
திடமா வுடையார், திருவருட் குப் பாத்திரரே,

இங்ஙனம் பகைவர் சேனையை ஒழித்த அறுமுகவேளின் கருணையை வியந்து, " வேல் மயில், வேல் மயில் " என்னும் ஜெபத்துடன் தமது மாளிகையை அடைந்தனர் நல்லியக் கோடர். இவருடன் போருக்கு வந்த பகையரசர்களும் இவரை அணுகிப்,

" பச்சைமா மயிலோன் அருளினுக்
கணியாம் பண்புளீர் ! அறிவிலா மையினுல்
துர்ச்செயல் புரிந்தோம் அதுபொறுத் தருளித்
தோழமை கொண்மின்னன் றிரந்தார் " [சே-பு-402]

நல்லியக் கோடரும் 'நன்று' என அவர்களுக்கு உபசார மொழிகூறி விருந்தளித்து அவரவர் நாட்டுக்குப் போக விடையளித்தார். இங்ஙனம் முருகவேளின் திருவருளையே உற்ற துணையாகக் கொண்டு அரசுபுரிந்து ஈற்றில் கந்தலோகம் சேர்ந்தனர் காவலர் *நல்லியக் கோடர். இதுவே இவ்வருமைப் பக்தரது வரலாறு.

*இவர் சங்கநூலாகிய சிறுபாணாற்றுப் படைத்தலைவர். இவருடைய ஊர் கிடங்கில் திண்டிவனத்தைச் சார்ந்துள்ளது. தாமரை இதழ்கள் வேல்களான இடம் இப்போது 'உப்பு வேலூர்' என வழங்குகின்றது. இடைக்கழி நாட்டு நல்லூர் நத்தனர் என்னும் சங்கப் புலவர் பாடிய சிறுபாணாற்றுப் படையில்:-

"திறல்வேல் நுதியிற் பூத்த கேணி விறல்வேல் வென்றி வேலூர்
செல்லிசை நிலைஇய பண்பின் நல்லியக் கோடன் "

என நல்லியக் கோடருடைய சிறப்பும் வரலாறும் வருவன காணவாகும்.

நல்லியக் கோட நாயனர் வரலாறு முற்றும்.

---

எங்கெங்கும் அந்தோ! இருவினைப் போர் முழக்கம்
பொங்கி, உலகம் பொசுங்குவது தீராதோ?

# சந்நியாசி

(ஆனந்தன்)

சந்நியாசி என்றால் யார்? அவரது லக்ஷணங்கள் என்ன? அவர் என்ன செய்து கொண்டிருப்பார்? என்றெல்லாம் இக்காலத்தில் சந்தேகங்கள் எழுகின்றன.

பலர் இக்காலத்தில் 'சந்நியாசி' என்ற பதத்திற்கு, 'வேலையில்லாமல் சுற்றி வருகின்றவர்கள், யாசகம் எடுத்து உண்டு வருபவர்கள். கடவுள் பேரால் காலத்தைக் கடத்தி வருபவர்கள். பிழைக்க வழியறியாது சந்நியாசியாகி விட்டவர்கள்' என்றெல்லாம் பொருள் கொள்கின்றனர். இது முற்றிலும் தவறு. வாழ்க்கையில் சலிப்புற்றுப் பிழைக்க வழியறியாமல் சந்நியாசிகளாகச் சுற்றி வருபவர்களும் இருக்கிறார்கள். ஆனால் அவர்கள் எல்லாம் உண்மைச் சந்நியாசிகள் அலல. குடும்பத்தில் இருந்து பொய் சூது முதலியவற்றை மேற்கொண்டு தீயவாழ்க்கை நடத்தித் துன்பங்களைப் பெருக்கிக் கொள்ளும் குடும்பிகளைவிட, அத்தகைய குடும்பங்களினின்றும் விலகிய வெற்றுச சந்நியாசிகள் மேலானவர்களே. அவர்கள் ஒரு காலத்தில் உண்மைச் சந்நியாசிகள் ஆக முடியும், சாது சங்கத்தில் கூடியிருத்தலால். ஆனால் பொய்யை எல்லாம் மெய்யென்று நம்பி, உண்மையில் அன்பில்லாதவர்களை அன்புள்ளவர்களாக நினைத்து, கவலைப்படத் தகாதவர்களைக் குறித்துக் கவலைப்பட்டு, ஆசா பாசங்களுள் மூழ்கிப் பல தீயகாரியங்களைப் புரிந்து பொருளீட்டி வரும் சம்சாரியோ ஒருக்காலும் உண்மையான சந்நியாசி ஆக முடியாது.

---

ஆசையொடு மாயாத ஆணவவி லாசத்தால்
நாசமடை யாதபடி, நம்பாநீ காவாயே.

மேற் கூறியவற்ருல், வாழ்க்கையில் சலிப்புற்று சந்நியாசி யாகியவனுக்கு, சம்சாரத்தில் தோஷதிருஷ்டி ஏற்பட்டு உண்மை சந்நியாசநிலை ஏற்பட்டாலும் ஏற்படலாம். எனினும், தீயவழியில் வாழ்க்கை நடத்துபவனுக்கு ஆசாபாசங்கள் மேலும் மேலும் பெருகிக் கொண்டு போகுமே தவிர, உள்ளத்தில் துறவு நிலை ஏற்படாது என்று தெரிகிறது.

ஆனல், குடும்பங்களி லிருந்தே பொய்யைப் பொய் யெனக் கண்டு, ஆசாபாசங்களில் மூழ்காது, யாரிடமும் சமமாக அன்புகொண்டு, தன் குடும்ப காரியங்களைக் கடமை யாகக் கருதிச் செய்து, தீயவழிகளில் வரும் பொருள்களைக் கனவிலும் தீண்டாமல் வாழும் உத்தமர்களே உண்மையான சந்நியாசிகள் ஆகின்ருர்கள். இவர்கள் தங்கள் குடும்பங்கள் போலப் பல குடும்பங்களும் வாழவேண்டும் என்றும், தங்கள் சுகபோகங்களை உலகத்திற்காகத் தியாகம் செய்தும், சத்தியம், சாந்தம், நேர்மை இவைகளுக்கு இருப்பிடமாய் வாழ்ந்து வருவர். இவர்கள் சுயநலமற்று, எதிலும் பற்றின்றிப் பல காரியங்களைச் செய்தும், அவைகளின் பலா பலன்களில் மனதை ஊன்ருமல், தாங்கள் செய்யும் காரியங்களுக்குத் தாங்கள் கர்த்தா என்று அகங்காரங் கொள்ளாமல், கீதா வாக்கியத்திற்கு இலக்காக வாழ்ந்து வருகின்றனர்.

ஆகையினல் 'சந்நியாசி' என்ற பதத்திற்குப் பொருள், சுயநலம் யாவையும் அற்று, தன்னுடைய சுகபோகங்களைப் பெரிதும் துறந்து, தன் பொருள், தன் வீடு, தன் மனைவி, தன் மக்கள் என்ற எண்ணங்களில் ஆழ்ந்து கிடக்காமல், உலகம் யாவும் வாழவேண்டும் என்ற பொது நோக்கத்தோடு வாழ்ந்து வருபவர் என்று அர்த்தம். இவர் இல்லறத்திலும் இருக்கலாம் துறவத்திலும் இருக்கலாம்.

---

நானெனும் ஒன்றெழுநது, நாலா யிரபேத
ஊனக் குரலெழுப்பும் உட்கலகம் ஓயாதோ?

இதனையே பட்டினத்துப் பிள்ளையார், ' அறந்தா னியற்றும் அவனிலும் கோடி அதிகம், இல்லம் துறந்தான்; அவனில் சதகோடி உள்ளத் துறவுடையோன் ' என்று தெளிவுபடக் கூறியுள்ளார்.

ஆதலால் நாம் அனைவரும், உள்ளத்தில் துறவுநிலை கொண்டு, *உலகப் பொருள்களால் மயக்க மடையாமல், இறை*வன் திருவடித் துணைகொண்டு, ' பேரானந்தம் பேராமை வைக்க வேண்டும் பெருமானே ' என்ற மாணிக்கவாசகப் பெருமானின் வாக்கினைப் பாடிப் பேரின்பப் பெருவாழ்வினை அடைவோமாக.

---

## ஸ்ரீ முருக ஆனந்த அமுதம்!

[ஆ. கி. ரங்கராஜன்]

அவனி வாழ் மக்கட்கெல்லாம் அளவிலா இன்ப மூட்டும் முருகபிரான், அன்பே வடிவமாய், அருளே உருவாய், அருளே உருவாம் ஆனந்த அமுதமாய், ஆதியாய், அநாதியாய் விளங்குகின்றுனும்!

பெரியோர்கள் அவனைக் ' குகனே !' என அழைக்கின்றனர். *குகையில் வசிப்பதால், முருகனுக்கு குகன் எனப்* பெயர் ஏற்பட்டதாம்.

குகையில் போய் முருகன ஏன் தங்கி வசிக்கிருன் ? அவன் பெரும் அரச குமாரனுயிற்றே ! கொன்றை வேந்தனின் செல்வ மைந்தனல்லா அவன் ! குகைக்குள் பதுங்கிக் கிடக்க வேண்டிய அவசியம் முருகனுக்கு ஏன் ?

முருகன் எங்கும் பதுங்கி யிருக்கவில்லை. அகில புவனமும் அளாவி நின்ற பரம்பொருளே ஸ்ரீ முருகன். அவனே " அய

---

என்னுள் உயிர்ப்பதெது? எண்ணலெது? பேசலெது?
இன்னும் அறிந்திலனே! ஈதுணர்வ(து) என்றேயோ?

னனவாகி, அரி எனவாகி, அறியொணுப் பொருளது ஆகி" "திசையாகி அத்திசைக்கோர் தெய்வமாகி" விளங்குகின்றுன். குற்றமற்ற யோகியர்கள் சந்ததமும், முருகனைத் தம் இதய மாகிய குகைக்குள் நிறுத்தித், தங்களுக்கு நற்கதி செல்ல வழிகாட்டும் குருநாதனுக வழிபடுகின்றனர்.

இத்தகைய முருகன், நாற்றிசைகளுடன், கீழ், மேல் ஆகிய ஆறு பகுதிகளிலும் உள்ள உலகினரும், தன்னை வணங்கி வழிபட்டு வாழக் கருதி, ஆறு முகங்கள் கொண்ட தனிப்பெரும் தலைவனுக விளங்குகின்றுன்.

* * * * *

"சூதும் வாதும் வேதனை செய்யும்" என்பது தமிழ்த் தாய்த் திருவாக்கு. இதனை நாம் மனேதத்வ, விஞ்ஞான முறைப் படி ஆராய்வோம்.

மனதிலே கபடமின்றி உள்ளதைக் கொண்டு திருப்தி யடைபவருக்கு, உடம்பும் சுகநிலையே எய்த இயலும். ஏனெ னில், மகிழ்ச்சி ஏற்பட்டால், அவயவங்கள் பூரித்து, இரத்த வேகம் துரித மடைந்து, பிணிகளை ஒழித்துக் கட்டுகிறது. கோபமோ விசனமோ ஏற்படும்போது இரத்தத்தில் சூடேறித் தீமைக்கு ஆதாரமாகிறது. மனதில் கபடமும், பொருமையும் ஏற்படும்போது, முதலில் உடலையே தாக்குகின்றன; அதனுல் வேதனை உண்டாகின்றது.

பிறர்க்கு சூதினுலும், வாதினுலும் தீமை இழைத்தலால் ஏற்படும் விளைவுகளை இங்கு விளக்கத் தேவை யில்லை.

இப்படி, வஞ்சமும் வாதும் தம்மிட மிருந்து அகற்றி, 'யாவுமே இறைவனருளால் இயங்குகின்றன—இயலுகின்றன என்ற நினைவில் விளங்குபவர் ஞானியர்கள். அவர்தம் அறி

---

சுற்றுலகம் வெற்றுலகம்; சூனியம் என்றுரைக்கும்
கற்றவர்தம் நோக்கம், கருதுவதும் என்றேயோ?

வாகிய மதியில் கார்த்திகேயன், சந்திர மண்டலத்தினின்று ஊறிப் பொங்கி வரும் உயரிய அமுதமாக விளங்குகின்றானும்.

உலகிற்கெல்லாம் மகிழ்ச்சியை யூட்டி, உயிர்களின் உள்ளமாகிய நிலத்தில் பக்தி எனும் விதையிட்டுப் பயிராக்கி அதிலே முக்தி எனும் கனி கனிய, அதற்கு ஆதாரமாக, அத்தியாவசியமாகப் பொழியக் கூடிய ஆனந்த மழையாம் கந்தன் !

மேலும் மாயை, மயக்கம் என்னும் பல விதமான களைப் பூண்டுகளை உள்ளத்தினின்று நீக்கி, முத்தியை அடைந்து இருப்போரைத் தனக்குள் சேர்த்து, தானாகவே ஆக்கிக் கொள்ளும் இயல்புடைய மாபெரும் ஞானமே வடிவான யானை யாம் முருகன் ! இதைக் கூறுமிடத்து, விநாயகனும் முருகனே என்பதும், 'துகள் அறு தெய்வமாகி' (பிரிவுகளும் பேதங் களும் அற்ற ஒரே தெய்வமாகி) என்று பெரியோர் குறிப்பிடும் வாக்கும் நமக்கு நினைவு வருகிறதல்லவா ?

முருகனின் புகழ் அளப்பதற்கரியது. அவனை நினைக்குந் தோறும், நமக்கு அவன் மெய்யின்ப விருந்தாக விளங்கு கின்றான்! அதுமட்டுமா? இதயத்தில் எத்தகைய களங்கமுமற்று, வாய்மையே உருவாக விளங்கும் அடியார்கள், தங்களுக்கே உரிமை யென்று பெருமிதம் கொள்ளத் தக்க செல்வமாகி, வரையறை யற்ற பெருமை கொண்ட இறைவனும் முருகப் பெருமான். அவன் யார் ? நமது முருகப் பெருமானே யாம் !

இதுவரை நாம் மேற்கண்ட அமுதச் சரக்குகளை எல்லாம் ஒன்றாகத் திரட்டி, நாம் பருக நமக்கு அளிக்கின்றார் வடலூர் வள்ளல். இதோ அந்த முருக ஆனந்த அமுத பானம் இருக்கிறது ; பருகுவோம்.

---

எல்லாரும் பேசுகின்ற எண்ணிறந்த சொற்களுள்;
சொல்லாத ஒன்றுண்டு; சொல்வாரும் தோன்றுவரோ ?

கோதகன்ற யோகர்மனக் குகையில் வாழும்
குருவே ! சண்முகம் கொண்ட கோவே ! வஞ்ச
வாதகன்ற ஞானியர்தம் மதியில் ஊறும்
வானமுதே ! ஆனந்த மழையே ! மாயை
வேதகன்ற முத்தர்களை விழுங்கும் ஞான
வேழமே ! மெய்யின்ப விருந்தே ! நெஞ்சில்
தீதகன்ற மெய்யடியார் தமக்கு வாய்த்த
செல்வமே ! எல்லையிலாச் சீர்மைத் தேவே !

—மகாதேவ மாலை 34 - அருட்பா.

---

சமரசம் 13

## பரம ரகஸ்யம்.

(ரஸபதி)

பண்டரிபுரம் என்பது, ஒரு பழம்பதி. அங்கு இருந்தவன் புண்டரீகன். அவன், மங்கை ஒருத்தியை மணந்தான், இரண்டொரு மாதங்கள் இடையில் சென்றன.

என்றும் சுதந்தரமாக இருக்க வேண்டும் ; அதற்குத் தனிக் குடித்தனந்தான் தகுதி ; இல்லாள் உள்ளம் இப்படி நினைத்தது. அதனால் கணவனிடம், மாமன் மாமிமேல் இல்லதும் பொல்லதும் சொல்ல லாயினள்.

நால்வர் முன்னிலையில் நகைமுகம். அடுத்துக் காட்டுவது பகைமுகம். என்னைப் பெற்றவர்க்கு என் அருமை தெரியும். நான் அங்கே போய்விடுகிறேன். நீர் என்றும் உம் தாய் தந்தையொடு இரும் ! கரித்துக் கொட்டுகிறார்கள். போதும் வேதனை என்று, கண்ணீர் சிந்தினள் கமலாம்பாள் ; நாள்தோறும் இந்த நடை.

---

கருவிகர ணச்சேட்டை கால்வாங்கிப் போக,
இரு விகாரச் சுட்(டு) எனைநீங்கல் என்றேயோ?

கண்ணீர்க் கணைகளும் சொற்களும், காதைத் துளைத்தன. உளத்தைப் பிளந்தன. மொறுமொறுத்து இருந்தான். ஒரு நாள் துணிந்தான். பொருபொருத்து எழுந்தான். சோறு தின்றுவிட்டு சும்மா யிருக்க முடியாதா? என்று, பொரிந்து கரிந்தான் புண்டரிகன்.

என்னடா அப்பா சொல்கிறாய்? என்ன செய்தோம் நாங்கள்? என்ற தந்தையின் தாடையில் கை வைத்தான். நீயும் குறுக்கிடுகிறாயா என்று, உதைத்துத் தாயை உருட்டினான். கண்டும் காணாதவள்போல் கமலாம்பாள் இருந்தாள்.

குலைந்த அவர்களை, வேறு வீட்டில் குடி வைத்தான். வயிறு கழுவ, அவர்கட்கு ஏதோ வாய்க்கரிசி என்று வழங்கினான். எங்கும் செல்ல இடம் இல்லை. முதிர்ந்த வயதினர். ஏங்கித் தவித்தனர்.

அழாதே மீனா! அவன் ஏதும் அறியான்; அவளும் இளையவள். குலாவும் அவள் சுதந்திரத்தில் நாம் குறுக்கிடவில்லை. பக்கத்து வீடு எதிர் வீடுகளைப் பார்த்தாள். அப்படியே தானும் இருக்க ஆசைப்பட்டாள். அதை நம்மிடமே அறிவித்திருக்கலாம்; சிறுசுதானே என்றார் தந்தை.

என்னை உதைத்தான். அதற்கு நான கவலைப் படவில்லை. தங்களை அறைந்தானே என்றுதான் மனம் நோகிறது. நாம் வருந்தினால், அது அவ்விருவர்களையும் பாதிக்கும். என்ன செய்தாலும் அவர்கள் செய்யட்டும். நமது சகிப்புத் தன்மையும், இயற்கையும் காலமும் அவர்களைத் திருத்தும் என்று மீனா கூறினாள்.

இப்படி மாறுவான் என்று எண்ணவில்லை. விதியின் விசித்திர விளைவுகளுள் இது ஒன்று, மீனா! அன்னபூரணி

---

பற்றுவிடு என்கின்றார்; யாரால்ஆம்; பற்றியது
அற்றுவிடா; அத்தன் அருளிருந்தால் ஆகுமரோ.

சமேதனே அவனுக்கு நல்லறிவை அளிப்பான் என்று, ஆறி மனம் தேறினர் ஞானியான தந்தை.

விசாலாட்சி சமேதா! விஸ்வநாதா! புண்டரீகன் அறிவைப் புனிதம் செய்! திருந்துமாறு அவனுக்குத் தெளிவு தா! என்று, இரவும் பகலும் இருவரும் ஏத்தினர்.

பண்டரி புரத்தில் ஒரு பக்தர். அவர் ஒரு மாதமாக காசி மகாத்மிய விரிவுரை செய்கிறர். அற்புதமாக இருக்கிறது. அது என்று, பலர் அறிவித்தனர்.

நாதா! புனிதமான அந்த இடத்திற்கு நாமும் போகலாமா என்ருள் கமலா.

பைத்தியக்காரி நீ. புராணப் பிரசங்கம் கேட்டுக் கொண்டிருக்க இதுவல்ல வயது. அதனுடன் மற்றொரு செய்தி.

அரசன் தன் கருத்தை, பறைமூலம் அறிவிப்பான்; அதை மீறினல் அதிக தண்டனே. அதுபோல், பரமன் அறைந்த பறைதான் பார காவியங்கள். செவியில் விழுந்ததை சிந்தையில் நிறுத்தி, அவைகளேச் செயல்படுத்த வேண்டும். மறப்பதும் மறுப்பதும் மாபாதகம் என்ருன்.

கேட்டபடி நடக்க வேண்டும் என்ருல், அருள் நூற்களே எவரும் அணுகவே மாட்டார்கள். கேட்டவரைக்கும் புண்ணியம், புராண சிரவணம் செய்ய, இன்று நீரும் நானும் போகத்தான் வேண்டும் என்று, கணவன் மனதைப் பலவாறு மீறு கரைத்தாள்.

மனேவி சொற்களே மறுக்க முடியவில்லே. சரி சரி என்ருன். அன்று மாலே, சேர்ந்து இருவரும் சென்றனர். சபையின ஒருபுறம் அமர்ந்தனர்.

---

எல்லாரும் மெய்ம்மை இயலுருவர் என்றெண்ண
வல்லாரே, ஞானம் வளர்நிலேயர் என்றறியே.

"பகீரதன் தவத்திற்கு இரங்கி, விண்ணில் இருந்த கங்கை மண்ணில் இறங்கினள். அவள பரிசத்தால், சகரர்கள் நற்கதி எய்தினர். பாவ உணர்வுகள், அக் கங்கையில் முழு கில் பறந்துவிடும். அக் கங்கை பாயும் காசியில், சிகா மந்திரத் திற்கு அதிக சிறப்புண்டு. சிகாரம் முத்தி பஞ்சாக்கரம்; கருணை யோடு அது, ஆன்மாக்களை அங்குக் காக்கிறது. அதனுலும் அப்பதி காசி யெனும் பெயர் கொண்டுளது.

அங்கு இறந்தாரை, விசாலாட்சியார் எடுப்பார். மடியில் இடுவார். விரிந்த முந்தானையால விசிறி இளைப்பாற்றுவார். அவ்வமயம் விஸ்வநாதர், உயிர்க்குத் தாரக உபதேசம் செய் வார். அப்பதியில் மோனம் எய்தியமுனிவர் பலர். அன்ன பூரணியின் அருளாட்சி, அங்குதான அதிகம். சிறந்த காசியை, வாழ்க்கையில் ஒருநாளேனும் சேவிக்க வேண்டும்!" இப்படி விரிவுரை இனிது நிகழ்ந்தது.

சிரவணித்த புண்டரிகன் உடல் சிலிர்த்தது. எழுந்தான். விரிவுரையாளர் அடிமலரில் விழுந்தான். தாஙகள் காசிக்குப் போம்பொழுது, நாங்களும் வருகிறேம் என்று, விநயம் காட்டி விண்ணப்பிததான்.

காலம் வந்தது. ஊரார் திரண்டனர். அரிய யாத்திரை ஆரம்பம் ஆயது. புண்டரீகனும் மனைவியுடன் புறப்பட்டான. அதை அவன் தாய் தந்தையர் அறிந்து மகிழ்ந்தனர்.

ஐயோ ! இடைவழியில் பசி எடுக்குமே ! முன் எச்சரிக்கை வேண்டுமே ! அவளும் அறியாள் ; அது அவனுக்கும் தெரி யாதே என்று, இருவரும் உள்ளம் குழம்பினர். அஙகும் இங்கும் முயனறனர். சிறந்த அரிசி யாதிய சேகரிததனர். இரணடொரு பாத்திரம். மூட்டை கட்டினர். தலைமேல் தாங் கினர். விரைந்து நடந்தனர். முடியவில்லை. ஆனுலும்

---

பேச்சடங்கி, ஆசா பிசாசம் அடங்கினேர்,
மூசசடங்கி, வாழும் முனிவோர்கள் ஆயினரே.

முன்னேறினர், யாத்ரிகர்கள் தங்கும் இடத்தில் தாமும் தங்கினர்.

மகனும் மருகியும், வழி நடந்து அயர்ந்தனர். அதைப் பெற்றோர் அறிந்தனர். சிரமம் பார்த்திலர். விரைந்து சமைத்தனர். இருவர்க்கும் பரிமாறினர். சிறிது நேரம் சிரம பரிகாரம். பிறகு எழுந்து நடந்தனர் யாத்திரை வாசிகள்.

நாம் சொல்லவில்லை. அவர்களே வருகிறார்கள். உணவைப் பசியறிந்து உதவுகிறார்கள். பாரம் சுமக்கிறார்கள். சுமக்கட்டும்; அது அவர்கள் கடமை என்றாள் மனைவி. தன் கடமை யாது என்பதை மறந்த புண்டரிகன், ஆம் ஆம் என்று தலையசைத்தான்.

கால் நோகிறதே. நடக்க முடியவில்லையே யென்று, தளர்ந்து நடந்தாள் கமலாம்பாள். உணர்ந்தான் புண்டரீகன். அவன் உள்ளம் நொந்தது. தோகையைத் தூக்கினான். தோளில் சுமந்தான். தொலை தூரம் நடந்தான். தங்குதல். பெற்றோர் உணவு பொங்குதல். அதை உண்ணல். நடத்தல். மனைவியைச் சுமத்தல். இப்படியே காதம் பலவும் கடந்தனர்.

அனைவரும் காசியை அடைந்தனர். அதன் எல்லையில் குக்குட முனிவர் குடியிருக்கிறார். அங்கு நடமாடுவோர், அவர் மகிமையை அதிகம் கூறினர். அவரைப் பார்க்க வேண்டும் என்ற எண்ணம் பிறந்தது. அவர் இருக்கும் ஆஸ்ரமத்தைத், தான் மட்டும் அணுகினான்.

அடுப்பு எரிகிறது. வனிதையர் ஐவர், சிறந்த பட்சணங்களைச் சித்தம் செய்கின்றனர். கண்பெற்ற பயன்போல், புண்டரிகன் அவர்களைக் கண்டான். வனதேவதைகளா இவர்கள் என்று, எண்ணியது அவன் மனம்.

ஆண்டான அடிநிழற்கே ஆளாகி, உள்ளுறவு
பூண்டிருக்கப் போதிக்கும் புண்ணியர்கள் எங்குளரோ?

உம்! எம்முன் நில்லாதே! குணத்திற் சிறந்தவர் குக்குட முனிவர். அவர் வருமுன் இங்கிருந்து போய்விடு! என்று அவர்கள் அதட்டினர்.

அப்படியா! அவர் எங்கே போயிருக்கிறார்?

புனிதமானவர்கள் தாய் தந்தையர்; அவர்களது பாத பூசை செய்யப் போயிருக்கிறார். நாங்கள் நதி தேவதைகள். அவர் வந்ததும், அவரை ஆராதிக்கவே, சாரமான இவைகளைச் சமைக்கிறோம்.

அடடே! உண்மை ஞானிகட்கும் உற்றார் பெற்றார் பாசம் உளதா?

புண்டரீகா! இதய அனுஷ்டானம் இல்லாமல், வாய்ப் பறை யறைய, உன்போலும் சிலர் உலகில் உளர். அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம். பத்து மாதம் சுமந்தாள். பல அவஸ்தைப் பட்டாள். பெற்று மகிழ்ந்தாள். உடல உதிரத்தை ஊட்டி வளர்த்தாள். பாடுபல பட்டாள். இவள் முதல் தெய்வம்.

புதல்வனே முதல்வன் என்று, உணர்ந்து கல்வியை ஊட்டினார். செல்வம் வேண்டும் மகனுககு என்று, இடையறாது முயன்றார், தன் சுகத்தை மறந்த தந்தை; இவர் இரண்டாவது தெய்வம்.

பிள்ளை இவர்கள் ஆசியைப் பெறவேண்டும். மாபெரும் அத் தர்மத்தை மறந்தாய். சுமந்து பெற்றவள் மூட்டை சுமந்தாள். அரிது வளர்த்தவர் தளர்ந்து நடந்தனர். பாகம் செய்து பரிமாறுகின்றனர். நீ வெறுத்து மறுத்தும் அன்பு செலுத்தினர். இடைவந்த மனைவியைத் தோளில ஏந்தினை! மாதா பிதாக்களை நையச் செய்த உன் வெய்ய முகத்தில் விழிப்பதும் பாபம்!

---

உடல்சிலிர்க்க, உள்ளம் குளிரஎனைப் பற்றி,
உடலுக்கும் ஞானக் குருவுறுவ(து) என்றேயோ?

மனைவியைப் பெறலாம்; மக்களைப் பெறலாம். கர்ப்பத்தில் உன்னைச் சுமந்து, நடக்க முடியாமல் நடந்தாளே! எவ்வகையாலும் நீ அதற்கு ஈடு செய்ய முடியுமா?

மார்மேலும், தோள்மேலும், மடிமேலும் வைத்துக் காத்த தந்தைக்குத், தநயன் செய்யும் கைம்மாறு இதுதானு? உன்னை வளர்த்தவர் உள்ளம் வருந்த, காசியாத்திரை செய்துவிட்டால் கர்மம் தொலைந்து விடுமா? மாதாவை ஒருநாளும் மறக்கவேண்டாம். தந்தைசொல் மிக்க மந்திரம் இல்லை என்று சொல்லிக் கொண்டே எழுந்தனர். உடனே விண்ணில் மறைந்தனர்.

அதிர்ந்தது புண்டரீகன் இதயம். அவர்கள் செய்த புத்தி மதி, தன் தாடையில் அறைந்தது போல இருந்தது. உண்மையை உணர்ந்தான். அவன் உள்ளம் நொந்தது. உடல் ஆடியது.

அம்மா! அப்பா! என்று அலறினன். ஓடினன். தாய் தந்தையர் முன் பொத்தென்று வீழ்ந்தான.

மகனே! என் கண்ணே! என்னடா செய்தி? என்று அலறினள் தாய். தந்தை மனம் பதைத்தது. கால் பிடித்த மகனின் தோள் பிடித்துத் தூக்கினர்.

அப்பா! நான் பாவி! துரோகி! ஐயோ அம்மா நான் துரோகி தான். மாபாதகனுன என்னை நீங்கள் மன்னிக்க வில்லையேல், வேதனை நரகம் என்னை விழுங்கிவிடும் என்று, கதறிய கண்ணீரால் அவர்கள் கால்களைக் கழுவினன்.

மகன்மேல் வைத்த பாசத்தால், மூச்சைப் பிடித்துக் கொண்டு முன்னேறிவந்த அவ்விருவரும், அவன் அன்பை அளந்த பிறகு தளர்ந்தனர். தள்ளாடி நடந்தனர். அதையறிந்தான். கயிறும் கம்பும் தேடினன். காவடி கட்டினன்.

---

என்தலைவன், என்கடவுள், எம்பெருமான் என்றடியேன்
அன்பால் பிதற்றி அலறுநாள் என்றுறுமோ?

இருவரையும் எடுத்தான். காவடியின் இருபுறத்தும் வைத்தான். அவர்கள் மறுப்பைப் பொருட் படுத்திலன். நமஸ்கரித்தான். சுமந்தான். மகிழ்ந்து நடந்தான்.

இச்சம்பவம் கண்ட கமலாம்பாளும் மனம் மாறினள். அவர்கள் வைத்திருந்த மூட்டையை எடுத்தாள். இடுப்பில் வைத்தாள். தொடர்ந்து நடந்தாள். முன்னிருந்த ஒரு நாழிகை தூரம் முடிந்தது.

புண்டரீகன், கங்கைக் கரையில் காவடியை இறக்கினான். பெற்றோரை நீராட்டினான். மனைவியுடன் தானும் மூழ்கி எழுந்தான். மனைவி சித்தம் செய்த உணவை, பெற்றோர் உள்ளம் உவக்க உண்பித்தான். அதன்பின் தம்பதிகள் உணவு கொண்டனர்.

கமலா! சிறந்த முனிவர் குக்குடர்; நெஞ்சம் அவரையே நினைக்கிறது. அவரை சேவித்து விட்டு விரைந்து வருகிறேன. அப்பா அம்மாவைப் பார்த்துக்கொள் என்றான். அங்கிருந்து ஓடினான். ஆஸ்ரமத்தை அணுகினான்.

வாய்மைக் குக்குடர், வணங்கி யெழுந்த அவனை வரவேற்றார்.

புண்டரீகா! உன் வரலாற்றை உணர்வேன். சிருஷ்டியின் தத்துவம் கூறுகிறேன். கேள்! தாயின் உணர்வில் தாமோதரர் தங்குகிறார். தந்தையின் உணர்வில், எந்தை சிவபிரான் எழுந்தருளி இருக்கின்றார். அதனால்தான் பெற்றோர்கள், அருமை மக்கள் என்று அன்பு காட்டுகின்றனர். வளர்க்கின்றனர். அதனால் விளையும் அயர்ச்சியை மறக்கின்றனர். இத் தேவரகசியத்தை, இதுவரை எவரும் அறிந்தது இல்லை. வாழ்விக்கும் மாதா பிதாக்களின பாத பூஜையை நாடோறும் வளர்க்க வேண்டும். கூடிய

---

அற்பு மதிக்கு, அகப்படாதே ஒளிரும்
*சிற்பரனைச் சேவித்துச், சீர்பெறுநாள் எந்நாளோ?*

அப்புண்ணியம், குரு உருவம் கொண்டு வரும். குருவின் திருவருள், தெய்வத் தோடு கூட்டிவிடும். இதனால் தான், மாதா பிதா குரு தெய்வம் என்று, வாய் மலர்கின்றார் மேலோர்கள். தாயின் அன்பால், சரியை தழைக்கும்; தந்தையின் பரிவால், கிரியை வளரும்; குருவின் அருளால், யோகம் கைகூடும்; இம்மூன்றையும் கண்ட சிறந்த தெய்வக் கிருபையால், ஞானம் சித்திக்கும்; இந்த வழிமுறை யின்றி, எடுத்ததும் தெய்வம் என்று, நான்காம் படியை நாடுகின்றனர். அதனால், உத்தம ஆத்ம சக்தி உருவாவது இல்லை; ஆஸ்திக இந்நுட்பத்தை அறியாதார், என்றுமே வாழ்க்கையில் இடர்ப்படு கின்றனர்.

சாதுக்களான உன் பெற்றோர்களின் சத்திய சங்கல்பம், தூய விரிவுரை கேட்கத் தூண்டியது. காசி யாத்திரை செய்யும் காதலைத தந்தது. சிறந்த நதிதேவதைகளின் சேவை சித்திக்கச் செய்தது. மாறா உன் மனைவியின் மனத்தையும் மாற்றியது. எண்ணிப் பார்! என்றார் குக்குடர்.

உண்மைதான். அரிய நூல்கள் இம்முறையையே அறிவிக்கின்றன. ஏழை மதி எவரையும் ஏமாற்றி விடுகிறது. இப்பொழுதேனும் அறிய நேர்ந்ததே என்று, மகிழ்ந்தது புண்டரீகன் மனம். முனிவர் அடியில் வணங்கி எழுந்தான். அவரிடம் பிரியாவிடைபெற்றுப் பிரிந்தான். தாய்தந்தையரைக் கண்டான். அவர்களுடன், விசாலாட்சி சமேத விசுவநாதரைச் சேவித்தான். வரவர அவன் கண்கட்கு, விசாலாட்சி போலவே அன்னை விளங்குகிறாள். கனிவுடைய தந்தையிடம், விஸ்வநாதரையே கண்டான். அவர்களைக் காவடியில் ஏற்றினான். புறப்பட்டான். மனைவியுடன் சொந்தவூர் வந்து சேர்ந்தான்.

நாள்தோறும் பெற்றோரை எடுத்துச் சென்றான். ஊரில் உள்ள சந்திரபாகா நதியில் நீராட்டினான். தானும் நீராடினான்.

---

**உள்ளத்தில சாட்சியாய் உற்றானை நோக்கிக்,**
**கள்ளமலம் பின்வாங்கக், காணுநாள் எந்நாளோ?**

கரையேறினான். அங்கே அவர்களது பாத பூஜை பண்ணினான். இல்லம் திரும்பினான். அன்பொடு மனைவி பரிமாறிய அன்னத்தை உண்பித்தான். இப்போது என்றும் அவன் கைங்கர்யம் இது.

பண்டரிபுர அருகில், கோபால்பூர் என்றுஒரு கிராமம். அங்கு ஒரு உத்தமி. பெயர் சந்திராவளி. ஆதி மாதவனையே அடைவேன் என்று, அவள் அங்கு சிறக்கத் தவம் செய்து கொண்டு இருந்தனள்.

அவள் முன், பிரசன்னர் ஆயினர் சிவபிரான். ஸ்வாமி! மாதவனை அடியேன் மணக்க விரும்பினேன். அரிய என் எண்ணம் கைகூட அருள்புரியும் என்று, விநயம் காட்டி வேண்டினள்.

சந்திராவளீ! சாதாரணமானவர் நிலைவேறு; தவம் செய்யும் தகுதியள் நீ. மா+தவர்=மாதவர்; லக்ஷ்மிபதி என்பது அதன் பொருள். மாது+அவர்=மாதவர்; பார்வதிபதி என்பது இதன்பொருள். இருவர் சொரூபமும் ஒன்றுதான்; அவரவர் பரிபாகத்திற்குத் தக்கபடி, வேறு வேறு உருவில் விளங்குகிறோம்.

பிரபோ! அடியேனும் அதனை அறிந்துளன். எனினும், அந்த மாதவர் கோலத்தையே அடியேன் மனனம் செய்துளன். வித்தக அச் சேவையையே விரும்புகிறேன்.

ஆனல் சரி. இதோ இருக்கிறார் மாதவர் என்று எதிரில் எழுந்தது ஒரு நாதம். ஏறிட்டு நோக்கினள். ஐம்படை ஏந்திய அற்புத உருவம். நீலமேக சியாமளத் திருமேனி. ஜகன் மோகன புன்னகை. கண்டாள். இருகரமும் குவித்தாள்.

விசால நோக்குடையவர் விசாலாட்சியார். அபேத நிலையை அறிந்தா லொழிய, எம்மான் அருளை எய்தல் இயலா.

---

உள்ளம், சிவாநந்தம் ஊறுமிடம் என்(று,) அதனை
மெள்ளமெள்ள ஓர்ந்து, மெய்யின்பம் காணேனோ?

அதை அறிவிப்பார்போல், உருக்குமணி உருவில் எதிர்வந்தார். எதிர்பாராத சந்திப்புப் போல, இருவரையும் நோக்கினர். நெடுஞ்சினம் கொண்டார்போல், அங்கிருந்து நீங்கினர்.

சந்திராவளீ ! சினந்து சென்றுள் ருக்குமணி. அவள் சீற்றம் தணித்துவிட்டு வருகிறேன். அதுவரை நீ இங்கேயே தவம் செய்துகொண்டு இரு என்று, புனித சிவனர் அங்கிருந்து புறப்பட்டார்.

சந்திரபாகா நதிக் கரையில் புண்டரீகன், பெற்றோர்க்கு சிறப்பான பாத பூஜை செய்கிருன்; கண்டார்; அவர் திருவுளம் மகிழ்ந்தது.

சபாஷ் புண்டரீகா ! நல்ல கைங்கர்யம் என்று நகைத்தார். கண்ணுதல் பரமனை, கண்ணன் உருவில் அவன் கண்டான். களித்தது மனம். கைகுவித்து வணங்கினன்.

கருணகரா ! சேற்றில் நிற்கிறீர் ! இதன்மேல் இரும் என்று, ஒரு செங்கல்லை யிட்டான். திருமால் கோல விஸ்வநாதர், அதன்மேல் ஏறினர்.

தேவா ! முதன்மைப் பாத பூஜையை, முடித்துவிட்டு வருகிறேன். எண்ணம் ஒன்று மனத்தில் எழுகிறது. பிறகு விணணப்பிக்கிறேன் ; அதுவரை தயவுசெய்து இரும் என்றுன். ஆகட்டும் என்றார் அத்தர். அதன்பின் புண்டரீகன், முறையாக வழிபாட்டை முடித்தான்.

பெரும ! வயது முதிர்ந்த உத்தம இவர்களை, வீட்டில் உணவருத்தி வருகிறேன். இரக்கம் கொண்டு, அதுவரை இங்கேயே இரும் என்று, கல்லுமுருகக் கனிந்து தொழுதான். நகைத்தார் நம்பர். ம், சரி என்றார்.

---

விருப்பு வெறுப்பற்று, வீண்செயல்க ளற்று,
இருப்பு சிவத்தின்பால், என்றிருப்பது என்றேயோ?

சிவத்தைச் சிந்தித்து சிவமயமா யிருக்கும் தாய்தந்தையர் களை, காவடியில் கொண்டு சென்றான். உபசரித்து வீட்டில் ஊட்டினான்.

அம்மா! அப்பா! கடனிற வண்ணர், அங்கேயே எனக்காகக் காத்திருக்கிறார். வரம் பெற்று மீள்கிறேன். உத்தரவு கொடுங்கள் என்று விண்ணப்பித்தான்.

புண்டரிகா! வரம் பெறுவது; அதன் பயனாக ஒருவனே வாழ்வது; இது முறையல்ல. நிமலர் அங்கே நிற்கிறார். அவர் திருவுளத்தை, ஓரளவு இங்கிருந்து உணர்கிறேன். இங்கே வா என்றார் தந்தை. அணுகிய அவன் செவியில், *அதிரகஸ்ய* மாக எதையோ அறிவித்தார். அப்படியா செய்தி என்று, மைந்தன் உள்ளம் துள்ளி மகிழ்ந்தது.

தொழுத கை தலைமேல் ஏற, கண்கள் இரண்டும புனித அன்பு மழை பொழியப் புறப்பட்டான். அத்தனை அணுகினான். ஆர்வம் கொண்டு நோக்கினான். உள்முகம் ஆயினான். விசாலாட்சி சமேத விஸ்வநாதர், வித்தக அவன் உணர்வில் விளையாடி நின்றார்.

தேவ தேவா! நான் வரம் கேட்டு நீர் அருளும்வரை, இக்கோலத்தில், அரிய சேவையை எவர்க்கும் அருளி யிரும்! என்று, விநய உணர்வால் விண்ணப்பித்தான். நிஷ்டையில் ஆழ்ந்து நிலைத்தான்.

பேரன்பு கொண்டு அவன் பிரார்த்தித்தபடி, பெருமான் இன்றும் அங்கு சிலா ரூபமாக இருக்கின்றார். அவனும் வரம் கேட்டிலன்; அவனுக்கு வாக்களித்தபடி, அவரும் அங்கேயே இருக்கின்றார். அவனை யளித்த அன்னை யத்தர் இருவரும், மருகியுடன் பெருமான் திருவருட் பேற்றினை எய்தினர்.

---

உடல்விழுமுன், ஒன்றும் பொருளை உணரும்
திடஞானம், என்னில் திகழ்வதுதான் என்றேயோ?

பண்டரி புரத்தில் இருக்கும் அத் திருவுருவம், பண்டரி நாதன் என்னும் அரிய திருநாமம் எய்தியது. விருஷப ரூர்திய ராதலின், அப்பெருமான் விடோபா எனும் பெயரும் விளங்கு வுளன். புண்டரிகனுக்கு அருளிய பெருமானை, நாமும் புண்டரீக வரதன் என்றும் போற்றலாம் அல்லவா !

வாழிய ஆஸ்திகம் !

வளர்க அமைதி.

ஓம்.

---

## Skanda Sashti 1962

ஜெய விப்ர ஜெனப்ரிய வீர நமோ
ஜெய பக்த ஜெனப்ரிய பத்ர நமோ
ஜெசாக விசாக குமார நமோ
பரிபாலய தாரக மாரக மாம்.

The Puranas would have it that on this day of the constellation (Skanda Sashti), the asuras led by Soorapadma and Tharakasura unfurled their banner of war against the Devas and the righteousness of the worlds. A fervent appeal for help went forth in prayer to Lord Kumara. The response was immediate. With Vel in hand and Sri Parasakthi lending the mother's backing up, the sprit of Divine

Service energicing the atmosphere of battle, Skanda the Kumara of the Lord Shiva, fell upon the forces of darkness, destroyed them and saved the world into the ways of peace. The forces of darkness were vanquished in no time and were consumed in the effulgent might of the Lord Power. The devotees lent the strength of their souls to the vanquishing hero of the mighty Vel. Evil was destroyed and the world was restored to peace, prosperity and blessedness. The present impending cataclysm, if it should at all mature, is seeking as it might but a divine mighty deliverer to save the situation Any help rendered in any possible form is out and out a divine worship at the present day. Henceforth let us pray, those of us who cannot fight or serve or give any more, thus to strengthen the forces of dharma, truth and justice. Let our trust be in our leader Sri Nehruji the visible symbol under divine guidance and inspiration. Let our strength be the might of our mother Sri Durgai. Let our power and shot be, not merely what our enemies may experience at the front, but the devotion and

U. V. SWAMINATHA
MADRAS-4

intensity, of our prayers to the Lord. May our president continue to be the representative treasure house that will receive and retain the blessings of providence on the mighty nations that stand together for peace of the world. Pray, Pray, Pray for all—where we can do no more. May our prayers forge unseen weapons of defence and attack under the guidance of the Lord's inspiration. May the Lords Sri Krishna, Rama and Skanda also take the field of battle against aggression and adharma, cruelty and untruth. To that end let us continue to give and to pray—the noblest sacrifice humanity can offer, at this critical juncture.

'Dharma Meva Jayati'

*Thiruppugal Mani.*

ஆறுமுகம்ஏன்? கண்கள் ஆறிரண்டும் ஏன்? அடியேற்(கு)
ஏது வினையொழிப்ப(து) எல்லாமோ—நீறணிவான்
கன்றே! திருச்செந்தில் கற்பகமே! நின் அருள்கண்
ஒன்றே அமையாதோ ஓது!

No. 1506 ASOKA நெ. 1506